



# ஞானச்சுடர்

## தை மலர் 2000




வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## குறள் வழி

"சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்து ஒருபால்
கோடாமை சான்றோர்க் கணி."

பொருள் :-

ஒரு பக்கம் சாயாது சமன் செய்யும் தராசுபோல
நடுநிலைமை நிற்றலே பெரியோர்க்கு அழகாகும்.

உ

சிவமயம்

# நற்சிந்தனை

## எங்கள் குருநாதன்

என்னையெனக் கறிவித்தா னெங்கள்குரு நாதன்
இணையடியென் தலைவைத்தா னெங்கள்குரு நாதன்
அன்னைபிதாக் குருவானா னெங்கள்குரு நாதன்
அவனியெல்லா மாளவைத்தா னெங்கள்குரு நாதன்
முன்னைவினை நீக்கிவிட்டா னெங்கள்குரு நாதன்
மூவருக்கு மறியவொண்ணா னெங்கள்குரு நாதன்
நன்மைதீமை யறியாதா னெங்கள்குரு நாதன்
நான்தானாய் விளங்குகின்றா னெங்கள்குரு நாதன். (1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்

வெளியீடு - 2 சுடர் - 25

2000 தை

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1) | ஏன் குட்டிக்கொள்கிறோம் | - 1 |
| 2) | பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் ..... | 2 - 3 |
| 3) | மூன்றாம் வயதில் ஞானச்சுடர் | - 4 |
| 4) | தெய்வம் உள்ளது என்று........ | 5 - 6 |
| 5) | மரணத்தின் பின் | 7 - 8 |
| 6) | செல்வச்சந்நிதி முருகோனே | - 9 |
| 7) | மாண்டவ்யர் | 10 - 13 |
| 8) | கலைவாணியின் சொரூப தத்துவங்கள் | 14 - 17 |
| 9) | சந்நிதி ஆச்சிரமப் பேரவையும் ......... | 18 - 19 |
| 10) | மானுடத்தை மேன்மைப்படுத்தும் மாண்புமிகு கோட்பாடுகள் | 20 - 23 |
| 11) | உய்விக்கும் உன் பணியால்........ | - 24 |
| 12) | குறளமுதம் | 25 - 29 |
| 13) | அப்பர் காட்டும் அருள்நெறி | 30 - 34 |
| 14) | சந்நிதியான் | 35 - 38 |
| 15) | இளமையாய் வாழ, இன்பமாய் வாழ | 39 - 40 |
| 16) | முருக மந்திரம் | 41 - 44 |
| 17) | ஸ்ரீசபாரத்தினம் சுவாமிகள் | 45 - 46 |
| 18) | ஒரு குடும்பத்தின் கதை | 47 - 48 |
| 19) | திருவாசக விழா | 49 - 50 |


அன்பளிப்பு : மலர் ஒன்று 30/- ரூபா

வருட சந்தா தபால் செலவுடன் 385/- ரூபா.

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர்

அச்சுப் பதிப்பு : அச்சகம் - சந்நிதியான் ஆச்சிரமம்

தொண்டைமானாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலைமணிச் சுடர் என வாழ்க!

தங்குபுகழ்த் தொண்டைமா னாற்றூர் செல்வச்
சந்நிதியான் ஆச்சிரமம் தனிற் பிறந்து
பொங்கிவளர் ஞானச்சுடர் நாமம் தாங்கிப்
புவனமெலாம் சைவநெறி, கலைப்பண் பாடு
சங்கமுயர் இலக்கியங்கள், சமூக சேவை,
தாங்குநலப் பெருவழிகள், புராண நூல்கள்
தூங்காதிரு திருமுறைகள் தொகுத்து வேதச்
சுவைநல்கும் ஈராண்டும் பரவ வாழி.

ஈராண்டு, மக்களெலாம் மனம் செழிக்கும்
இனிய சிவ நயங்காட்டி, அடியார்க்கெல்லாம்
சீராகப் பசிபோக்கிச் செவிக்கினித்த
சிறந்தசொற் பொழிவிசைகள் கலைகள் ஊட்டும்
நேரார்சந் நிதியான்ஆச் சிரமம் வாழ்ந்தாய்
மூன்றாம் ஆண்டுதிரு ஞானச் செல்வன்
பாராரும் பணிபுரிந்த வண்ணம் - ஞானப்
பயிர்வளர்த்துக் கற்பகம் போல் வாழிவாழி.

ஆண்டுமூவை தாயஞா னச்சுடர்
நீண்டவேலவன் நிரைகழ லின்துணை
பூண்டு, மெய்யருள் பொங்கி, உலகெலாம்
ஈண்டு மலைமணிச் சுடரென வாழ்கவே.

அருட்கவி. சீ. விநாசித்தம்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

குருபாதம்

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த

பரமாசார்ய ஸ்வாமிகள் அவர்களின்

# அருளாசிச் செய்தி

அன்புசார் பெருந்தகையீர்,

செல்வச்சந்நிதி "சந்நிதியான் ஆச்சிரம" சைவகலை பண்பாட்டுப் பேரவையின் மாதாமாதம் வெளிவரும் 'ஞானச்சுடர் மலர்' ஆண்டு மலராக வெளிவருவதை இட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றோம். வரலாற்றுப் பெருமைமிக்க சந்நிதி முருகனுடைய அருளால் மயில்வாகனசுவாமிகளின் அடியொற்றி ஆரம்பிக்கப்பட்ட சந்நிதியான் ஆச்சிரமம் முருகனை வழிபட வரும் அடியார்களுக்கு வயிறார உணவு அளித்துவரும் ஆச்சிரமம் பலபணிகளை இன்று செய்துகொண்டு வருவது எல்லோர்க்கும் மன மகிழ்ச்சியைத் தருகின்றது. அப்பணிகளில் மாதா மாதம் மலரும் ஞானச்சுடர் அறிவையும் சமய விழுமியங்களையும் சிந்திக்க தூண்டுவதாக பல கட்டுரைகளையும் சிறுகதைகளையும் தாங்கிவருவது வாசிக்கும் ஆர்வத்தை தூண்டுகின்றது. மாதாமாதம் குறித்த காலத்தில் மலர் வெளிவந்து அனைவரது கரங்களிலும் கிடைப்பது நிர்வாகத்தின் செயல்திறனை அனைவரும் வாழ்த்தத்தக்கதாக உள்ளது. மூன்றாவது ஆண்டாக மலரும் ஞானச்சுடர் புத்தாயிரமாண்டில் சைவமக்களை நன்னெறியில் வாழ்வதற்கும் சமய கோட்பாடுகளை மக்கள் அறிந்து கொள்வதற்கும் ஏற்ற வகையில் வெளிவருவது வரவேற்கத்தக்கது.

ஞானச்சுடர் ஆசிரியரையும், சைவகலை பண்பாட்டுப் பேரவையினரையும் இறைவன் ஆசிர்வதிக்கவும், ஆச்சிரமத்தின் பணிகள் சிறப்புற்று விளங்கி மக்களுக்கு பயன்தர இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஞானச்சுடரே" வா!

மெய் ஞானம் என்றும் பெருகிட
அஞ்ஞானம் இன்றே அகன்றிட
துன்பங்கள் நீங்கி மறைந்திட
துயரங்கள் ஓடிப் பறந்திட
மூன்றாம் ஆண்டில் வெளிவரும்
"ஞானச்சுடரே" வா! வா! வா!

இன்பமாய் நாம் வாழ்ந்திட
இன்பப் பாதை காட்டிட
அன்புநெறி எங்கும் பரவிட
அழுக்காறு ஓடி அகன்றிட
இன்றல்ல நேற்றல்ல என்நாளும்
"ஞானச்சுடரே" வா! வா! வா!


கற்றோர் யாவரும் விரும்பிட
இறைவழி நின்று வாழ்ந்திட
இனிய பண்பை வளர்த்திட
இனிதே வாழ்வை வளமாக்க
மாதந் தோறும் வெளிவரும்
"ஞானச்சுடரே" வா! வா! வா!

அறநெறிப் பண்பைப் போற்றிட
ஆன்மீக அறிவை வளர்த்திட
தாழ்வை நீக்கி வாழ்ந்திட
தெய்வீகக் கலைகள் மலர்ந்திட
ஆற்றங் கரையான் அருளாலே
"ஞானச்சுடரே" வா! வா! வா!

சமூகஜோதி
கா. கணேசதாசன் J. P.
(ஓய்வு பெற்ற அதிபர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# சந்நிதியான் ஆச்சிரம
## சைவ கலை பண்பாட்டுப் பேரவை
### தொண்டைமானாறு

ஸ்தாபிதம் : 27 - 09 - 1992

**போஷகர்கள் :**

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய ஸ்வாமிகள்
[ நல்லை ஆதீன முதல்வர் ]

சிவஸ்ரீ பண்டிதர் சைவப்புலவர்
கா. நமசிவாயக் குருக்கள்
[ கலைமகள் ஆசிரிய ஆலோசகர் ]

சிவஸ்ரீ சோ. குண்டபாணிக்கேநிஸர் J. P.
[ வல்லை ஸ்ரீ முத்துமாரியம்மன் பிரதமகுரு ]

பிரம்மஸ்ரீ ப. மனோகரக்குருக்கள்
[ வல்லை வைத்தீஸ்வரன் தேவஸ்தானம் ]

**தலைவர் :**
மி. நாகலிங்கம்
( தொழிலதிபர் )

**செயலாளர் :**
ந. அரியரெத்தினம்
( அதிபர் யா / தொண்டைமானாறு, வீரகத்திப்பிள்ளை ம. வி. )

**பொருளாளர் :**
செ. மோகனதாஸ்
( நிர்வாகி, சந்நிதியான் ஆச்சிரமம் )

**உபதலைவர் :**
க. செங்கொழுந்து J. P.
( உடுப்பிட்டி )

**உபசெயலாளர் :**
ஆ. அருணாசலம்
( செல்வச்சந்நிதி )

**உபபொருளாளர் :**
செ. நடராசா
( இடைக்காடு )

**நிர்வாகசபை உறுப்பினர்கள் :**

க. திருப்பரங்கிரிநாதன்
( ஓய்வு பெற்ற தபாலதிபர், இமையாணன் )

பண்டிதர் க. முத்துவேலு
( இளை. ஆசிரியர் இமையாணன் )

A. அரசபிள்ளை
( கம்பர்மலை )

க. கந்தசாமி
( ஓய்வு பெற்ற தபாலதிபர், கரணவாய் )

இசைமணி செ. துரைராசா
( கெருடாவில் )

க. அருள்லிங்கம்
( கரணவாய் )

சி. நவரெத்தினம்
( ஓய்வு பெற்ற ஆசிரியர், கரணவாய் )

சே. ரவீந்திரநாதன்
( உடுப்பிட்டி )

இ. புஸ்பநாதன்
( உடுப்பிட்டி )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஞானச்சுடர்"
# மார்கழி மாத வெளியீடு

## அறிமுகவுரை :

மார்கழி மாத மலருக்கான அறிமுகவுரையை வல்வை முத்துமாரி அம்மன் தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ சோ. தண்டபாணிக தேசிகர் அவர்கள் மேற்கொண்டார்கள். தொடர்ச்சியாக இரண்டு வருடங்கள் வெளிவந்து கொண்டிருக்கும் ஆத்மீக நூலான ஞானச்சுடரின் முதல் வெளியீட்டில் பங்குபற்றுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்ததை நினைவு கூர்ந்த பிரதமகுரு அவர்கள் தற்போதைய வெளியீட்டிலும் பங்குபற்றுவதற்கு கிடைத்த சந்தர்ப்பத்தை ஒரு பேறாகக் கருதுவதாகச் சபையினருக்கு எடுத்துக்கூறினார்கள்.

பல மலர்கள் தோன்றி மறைந்து கொண்டிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கும் இந்த மலர் இனி மென்மேலும் பிரகாசிக்க வேண்டுமென்றும் புத்தாயிரமாம் ஆண்டில் மக்கள் சுபீட்சமடைய வேண்டியும் தனது ஆசிகளை வழங்கினார்கள்.

## மதிப்பீட்டுரை :

மலருக்கான மதிப்புரையை யாழ் பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைத் தலைவர் பேராசிரியர் பிரம்மஸ்ரீ ப. கோபாலகிருஷ்ண ஐயர் அவர்கள் மேற்கொண்டார்கள். ஆச்சிரமம் என்றால் அது எப்படிச் செயற்பட வேண்டுமென்பதை பேராசிரியர் அவர்கள் அடியார்களுக்கு எடுத்துக்கூறினார்கள். சந்நிதியான் ஆச்சிரமம் ஏனைய தொண்டுகளுடன் செவிக்கும், சிந்தனைக்கும் விருந்தாகக் கூடிய வகையில் ஆத்மீகப் பணிகளையும் மேற்கொண்டு வருவது சிறப்பாகச் சுட்டிக் காட்டப்பட வேண்டியது என்பதையும் குறிப்பிட்டார்கள்.

தற்காலத்தில் ஆத்மீக பத்திரிகை ஒன்றை நடாத்துவது என்பது இலேசான காரியமல்ல என்பதை எடுத்துக் கூறிய பேராசிரியர் அவர்கள் பலதரப்பட்ட கட்டுரைகளைத் தாங்கி பலதரப்பட்டவர்களுக்கும் பொருந்தக் கூடியதாக சுடர் வெளிவந்து கொண்டிருப்பதை கட்டுரைகளை ஆதாரமாகக் கொண்டு எடுத்துக் கூறினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாவது வயதில்...

ஞானச்சுடர் எமது மங்களகரமானவையுடன் ஒரு ஆத்மீகச்சஞ்சிகையாக மூன்றாவது வயதில் காலடி வைப்பதையிட்டு எமது மகிழ்ச்சியை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

ஞானச்சுடர் எமது பிரதேசத்துடன் மட்டும் தொடர்புபட்டதாயிருந்த நிலையிலிருந்து விடுபட்டு இன்று இலங்கையின் ஏனைய பகுதிகளுக்கு மட்டுமன்றி கடல் கடந்தும் தனது சுடரைப் பரப்பிக்கொண்டிருப்பது எமக்கு பெருமையளிப்பதாகவுள்ளது.

தூய்மையான நோக்கத்துடன் ஞானச்சுடர் வெளிவந்து கொண்டிருப்பதும் அதன் மீது ஆற்றங்கரையானுடைய அருட்பார்வை ஆழமாகப் பதிந்திருப்பதுமே அதன் சிறப்பிற்கும் உயர்விற்கும் காரணமென்று நாம் நம்புகின்றோம்.

சுடர் பிரகாசிப்பதற்கு தமது ஆக்கங்களை வழங்கிக்கொண்டிருக்கின்ற சமயப் பெரியோர்களையும், அறிஞர் பெருமக்களையும் இந்தச் சந்தர்ப்பத்தில் நன்றியுடன் கௌரவிப்பதும் அவர்களை ஊக்கப்படுத்துவதும் பொருத்தமான ஒரு கைங்கரியமே. அதே போன்று எமது பணியைப்பாராட்டி தனிப்பட்ட முறையிலும், அமைப்புரீதியாகவும் பல்வேறு வாழ்த்துக்களை அனுப்பிக்கொண்டிருக்கும் நல்ல உள்ளங்களுக்கும், எமது அன்பான வாசகர்களுக்கும் இந்த சந்தர்ப்பத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்

மேலும் எமது மொழிக்கு பெருமை பெற்றுத்தரும் திருக்குறள் தொடர்பான சிறப்புக்களையும், சுடர் தரும் தகவல் என்ற புதிய அம்சங்களையும் உள்ளடக்கி வெளிவருகின்ற புத்தாயிரமாம் ஆண்டுச் சுடர் மேலும் பிரகாசிக்க சந்நிதியான் திருப்பாதங்களைப் பணிகின்றோம்.

பேரவையின் சார்பில்
ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் தரும் தகவல்

பொய், களவு, நம்பிக்கைத்துரோகம், கடமை தவறுதல் போன்ற தர்மத்திற்கு புறம்பான காரியங்களே சமகால வாழ்க்கையில் மலிந்து காணப்படுவதால் மனிதாபிமானம் என்றால் என்ன என்பதே தெரியாமல் அதிகமானவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். மனிததர்மம், மனிதாபிமானம் என்பவை அழிந்து போய்விட்டதா? என்று பல பெரியோர்கள் அங்கலாய்ப்பதையும் காணமுடிகிறது.

ஆனாலும் இவ்விதமான கபடச் செயற்பாடுகள் முனைப்புற்றுக் காணப்படும் இக்காலகட்டத்திலும் மனிதநேயம் அழியவில்லை என்பதை பின்வரும் சம்பவம் எமக்கு எடுத்துக்காட்டுகின்றது.

திரு. பா. லிங்கமூர்த்தி என்ற ஓய்வுபெற்ற காணி அபிவிருத்தி உத்தியோகத்தர் 752 இலக்கமுடைய இ. போ. ச. பேருந்து வண்டியில் 13 - 12 - 99 ஆம் திகதி 1 - 45 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து அவரது சொந்த இடமான வல்வெட்டித்துறைக்கு பிரயாணம் செய்யும் பொழுது தனது தேசிய அடையாள அட்டையை தவறவிட்டு விட்டார். ஒரு கரும காரியத்திற்காக சென்று வந்த அவருக்கு இப்படி நடந்துவிட்டதே என்று அவரது மனைவியும் கவலைப்பட்டு குழப்பத்துடன் அன்றைய பொழுதைப் போக்கினர்.

அடுத்த நாள் காலையில் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டு கதவைத் திறந்தனர். அங்கே ஒரு நடுத்தர வயதைத் தாண்டிய பெண் காணப்பட்டார். அவர் நீங்கள் தானே லிங்கமூர்த்தி? நேற்று நீங்கள் ஏதாவது பொருளைத் தவற விட்டீர்களா என்று கேட்க, லிங்கமூர்த்தி அவர்களும் தனது அடையாள அட்டை தொலைந்தது பற்றிக் கூறுகின்றார்.

அப்பொழுது அந்தப்பெண் அதற்குள் எவ்வளவு பணம் வைத்திருந்தீர்கள் எனக்கேட்கின்றார். இதனைக்கேட்ட லிங்கமூர்த்தி அவர்கள் குழப்பத்துடன் என்ன செய்வது என்று தெரியாது சிறிது தடுமாற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடைந்தார். பின்பு ஒருவாறு தன்னைச் சுதாகரித்துக்கொண்டு நிதானமாக அதற்குள் பணம் எதுவும் நான் வைக்கவில்லையே என்று பதில் கூறினார்.

அதற்கு அந்த அம்மா அதனை நான் எடுக்கும் பொழுதும் பணம் இருக்கவில்லைத்தான் ஆனால் அதற்குள் நீங்கள் பணம் வைத்திருந்தால் அந்தப்பணத்தையும் போட்டு ஒப்படைக்கவே அவ்வாறு கேட்டேன் ஏனென்றால் அடையாள அட்டையை ஒப்படைக்கும் பொழுது அதற்குள் இருந்த பணத்திற்கும் நானே பொறுப்பு என்று பதில் கூறினார்.

கண்டெடுத்த அடையாள அட்டையை அவரது வீட்டைத்தேடி ஒப்படைக்க விரும்பியது மட்டுமன்றி தனது தூய்மையான தர்மநெறி சார்ந்த செயற்பாட்டிற்கு களங்கம் ஏற்படாதிருப்பதற்காக தனது சொந்தப் பணத்தையே இழக்க விரும்பியுள்ளார் அந்தப்பெண். வல்வெட்டித் துறைக்கு அயலில் உள்ள மாரிக்காடு என்ற கிராமத்தைச்சேர்ந்த திருமதி பவானி முருகுப்பிள்ளை என்பவரே அந்த தர்மநெறிதவறாத பெண்.

சன நூலகம்

**மாணவர் பக்கம்**

**வழமைபோல் மாசிமாத மலரில்**

**இடம் பெறும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தை மாத சிறப்புப் பிரதி பெறுவோர்

திரு. சு. கங்கைவேணியன்
( வேணி களஞ்சியம், யாழ்ப்பாணம். )

திரு. Dr. K. சிவஞானசூரியர்
( மாளிகாவத்தை, கொழும்பு. )

திரு. நா. குணரட்ணம்
( புதிய யாழ். வைத்தியசாலை, ஆனைப்பந்தி. )

திரு. ந. நற்குணம்
( கபிலா நகைமாடம், பருத்தித்துறை. )

திரு. சி. மகேசலிங்கம்
( தமிழ்ப்பூங்கா, நெல்லியடி. )

திரு. ஆ. ஜீவரெட்ணம்
( ஆறுமுகம் சித்ராலயம், திருநெல்வேலி. )

திரு. க. சோமசேகரம்
( மகாராணி புடவை அகம், யாழ். )

திரு. ந. சிவகுமார்
( ராஜன் எலக்ரோனிக், அச்சுவேலி. )

லயன் K. செல்வரத்தினம் J. P.
( ஆஸ்பத்திரி வீதி, அச்சுவேலி. )

உரிமையாளர்
( பாக்கியரெட்ணம் ஹாட்வெயர்ஸ், சங்கானை. )

திரு. வே. கந்தையாபிள்ளை அன் சன்ஸ்
( 49, கே. கே. எஸ். வீதி, யாழ். )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமையாளர்
( முலாயன் கபே, பெரியகடை – யாழ். )

திரு. S. ஞானரூபன்
( அஜந்தாஸ் பெரியகடை – யாழ். )

திரு. செ. சதியாபரணம்
( வளர்மதி பிடவை அகம், கே. கே. எஸ். வீதி, யாழ். )

திரு. இரா. ஸ்ரீநடராசா
( லிங்கோ கல்விமன்றம், உடுப்பிட்டி. )

திரு. ஆ. பாலகிருஷ்ணன்
( கலைவாணி அண்ணாபடிக் களஞ்சியம், நெல்லியடி. )

திரு. க. பாலசுப்பிரமணியம்
( பதிவாளர் கல்லூரியில், உடுப்பிட்டி. )

உரிமையாளர்
( ஸ்ரீ கிருஷ்ணாஸ், சங்கானை. )

திரு. கி. யோகநாதன்
( யோகாஸ் றீம் கவுஸ், கந்தமுருகேசனார் சிலையடி, மந்திகை. )

திரு. V. இரத்தினசிங்கம்
( சௌசக்தி மோட்டோர்ஸ் அன் கொமினிக்கேசன், பருத்தித்துறை. )

திரு. சி. அமிர்தலிங்கம்
( இராச இல்லம், இக்கம் – அல்வாய். )

இலங்கை வங்கி
( காங்கேசன்துறைக் கிளை. )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர் வாசகர் போட்டியில்
# பரிசு பெற்றோர் விபரம்

1-ம் இடம் : செல்வி நந்தினி கணேசதாசன்
(கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்)

2-ம் இடம் : திரு. நிர்மலநாதபிள்ளை சிவநேசபிள்ளை
(இடைக்காடு, அச்சுவேலி)

3-ம் இடம் : செல்வி வ. கலாதேவி
(நல்லூர், யாழ்ப்பாணம்)

## ஆறுதல் பரிசு பெறுவோர் விபரம்

செல்வி பாமினா கனகராசா
(நல்லூர், யாழ்ப்பாணம்)

திருமதி சுலோஜனா ஜெயதாசன்
(இருபாலை கிழக்கு, கோப்பாய்)

திரு. சின்னையா சந்திரசேகரம்
(ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி)

செல்வி கௌரீஸ்வரி இரத்தினசபாபதி
(புங்கன்குளம் வீதி, யாழ்ப்பாணம்)

செல்வன் சந்திரலிங்கம் பிரதன்
(இன்பருட்டி, பருத்தித்துறை)

செல்வி சுகந்தினி சுப்பிரமணியம்
(அச்சுவேலி தெற்கு)

செல்வி நந்தகுமாரி இராமலிங்கமூர்த்தி
(அச்செழு, நீர்வேலி)


திரு. க. கந்தசாமி
(சிவன் வீதி, ஆவரங்கால்)

செல்வி ஜெகசோதி சரவணமூர்த்தி
(சூராவத்தை, சுன்னாகம்)

செல்வி பவிதா கணேசன்
(வெள்ளவத்தை, கொழும்பு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன் குட்டிக்கொள்கிறோம்?



விநாயகர் திருமுன் நின்று வணங்கும்போது இரண்டு கைகளாலும் தலையில் குட்டிக்கொள்கிறோம் ஏன்?

வடக்கேயிருந்து ஒரு நாள் அகத்தியர் தம்முடைய கமண்டலத்தில் கங்கை ஆற்று நீரை அடைத்துக்கொண்டு தெற்கே வந்தார். குடகு மலையில் அமர்ந்து கமண்டலத்தைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு சிவபூசை செய்து கொண்டிருந்தார். அந்தநேரத்தில் இந்திரன் சீர்காழியில் மறைந்திருந்து பூசை செய்து கொண்டிருந்தான். நெடுநாள் மழையில்லாமையால் பூசைக்குப் பூ கிடைக்கவில்லை. இதற்கு என்ன செய்வது என்று இந்திரன் கலங்கினான். அப்போது அங்கு வந்த நாரதர் அகத்திய முனிவருடைய கமண்டலத்திலிருக்கும் நீரை வெளியே பாயும்படி செய்தால் நந்தவனம் செழிக்கும் என்றார். உடனே இந்திரன் விநாயகரை வழிபட்டு அகத்தியரின் கமண்டல நீரை வெளியேற்றும்படி வேண்டினான். விநாயகர் காக்கை வடிவில் சென்று கமண்டலத்தின்மீது அமர்ந்தார். அகத்தியர் காக்கையைக் கையசைத்து விரட்டினார். காக்கை கமண்டலத்தைக் காலால் உதைத்து விட்டுப் பறந்தது. கமண்டலம் கவிழ்ந்தது கமண்டல நீர் காவிரியாகப் பெருக்கெடுத்தது.

அகத்தியர் காக்கையைச் சீறினார். காக்கை ஒரு சிறுவனாக உருமாறி நின்றது. சிறுவனை இரண்டு கைகளாலும் தலையில் குட்ட ஓடினார் அகத்தியர். சிறுவனும் ஓடினான் அகத்தியர் மேலும் விரட்டிக் கொண்டே ஓடினார். விநாயகர் தம் உண்மை வடிவைக் காட்டவே திகைத்து விட்டார் அகத்தியர். பின்னர் அவர் விநாயகரை வணங்கி "ஓங்காரப்பொருளே உன்னைச் சிறுவன் என்று கருதிக் குட்ட வந்த நானே சிறுவன் என்று சொல்லித் தம் தலையில் குட்டிக் கொண்டார்."

விநாயகர் "அன்பனே இன்று முதல் என் திருமுன் பக்தியுடன் நின்று தம் தலையில் குட்டிக் கொள்வோர் கூரிய அறிவும் சீரிய செல்வமும்பெற்று வாழ்வர் என்றார்" அது முதல் ஏற்பட்டதுதான் இந்தக்குட்டிக் கொள்ளும் வணக்க முறையாகும்.

தொகுப்பு :
க. சிவசங்கரநாதன்

அருளின் மிக உயர்ந்த வடிவம் மௌனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### பகவான்

# ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் திருவாய்மலர்ந்து அருளியவை

## பெண் ஆசைப் பிணிப்பு

ஓர் ஏழைப் பிராமணனுக்குச் செல்வனான ஒரு வர்த்தகன் ஒருவன் சிஷ்யனாக இருந்தான். அவ்வர்த்தகன் பரமலோபி. ஒரு நாள், அந்தப் பிராமணன் தனது பாகவத புஸ்தகத்திற்கு உறை போடுவதற்காக ஒரு சிறு வஸ்திரத்துண்டு வேண்டும் என்று தனது சிஷ்யனிடம் கேட்டான். வர்த்தகனோ "சுவாமி! தங்களுக்கு இல்லை என்று சொல்வதற்கு மனம் வருந்துகிறேன். சற்றுமுன்னால் சொல்லியிருந்தீர்களேயானால் தாங்கள் கேட்டதைக் கொடுத்திருப்பேன். இப்போது என் வசம் சிறிய துண்டு ஒன்றும் இல்லையே என்றாலும் தாங்கள் கேட்டது எனக்கு ஞாபகமிருக்கும். ஆனால் அடிக்கடி மாத்திரம் நினைப்பூட்டுங்கள்" என்று பதில் சொல்லி அனுப்பினான். பிராமணன் வெறும் கையனாக வீட்டிற்குத் திரும்ப வேண்டியதாயிற்று. குருவுக்கும் சிஷ்யனுக்கும் நடந்த இந்தச் சம்பாஷணையை அச்சிஷ்யனுடைய மனைவி பின்னால் இருந்து கேட்டாள். அவள் உடனே ஒரு மனிதனைப் பின்பக்கமாக அனுப்பி பிராமணனை அழைத்து வரச்செய்து, அவருடன் உள்ளே சென்று "சுவாமி! என் கணவரிடம் தாங்கள் கேட்டது என்னவோ"? என்று கேட்டாள். நடந்ததைச் சொன்னான் பிராமணன். வர்த்தகனுடைய மனைவி, "சுவாமி! தாங்கள் வீட்டிற்குச் செல்லலாம். நாளைக்காலையில் விரும்பிய வஸ்திரம் அங்கு வந்துசேரும்" என்று சொல்லி அனுப்பினாள். அன்றிரவு வியாபாரி வீட்டிற்கு வந்ததும், அவன் மனைவி 'இன்றைக்குக் கடை மூடியாய் விட்டதா? என்று கேட்டாள். "மூடியாய்விட்டது, விசேஷம் என்ன"? என்றான் வர்த்தகன். அதற்கு அவள், "உடனே கடைக்குப்போய் அங்கிருக்கும் விலையுயர்ந்த வஸ்திரங்களில் இரண்டை எடுத்து வாருங்கள்" என்றாள். "என்ன அவசரம்? நாளைக்காலையில் எடுத்துவந்து தருகிறேன்" என்றான் வர்த்தகன். "இல்லை, எனக்கு இப்போதே வேண்டும். இல்லாவிட்டால் சோறுடனே வேண்டாம்" என்றாள் அவன் மனைவி. வர்த்தகன் என்ன செய்வான்? பாவம்! வீண் சாக்குப் போக்குகளைச் சொல்லிப் போகச் சொல்லக்கூடிய ஆத்ம குரு அல்ல இவள். உடனே கீழ்ப்படிய வேண்டிய 'தலையணை மந்திர குரு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள். சொன்னதைக் கேட்காவிட்டால், அன்றைய இராப்போது பெரும்பாடாக முடியும் என்பதை உணர்ந்த வர்த்தகன் அந்த நிசியில் மறுபடியும் கடைக்குப்போய் திறந்து, மனைவி கேட்ட வஸ்திரங்களுடன் திரும்பி வந்தான். மறுநாள் காலையில் அவள் அவ்வஸ்திரங்களைக் குருவுக்கு அனுப்பும் போது, இனிமேல் தங்களுக்கு ஏதேனும் தேவையாக இருந்தால், எனக்குத் தெரிவித்தால், நான் கொடுத்தனுப்புவேன்'' என்று சொல்லும்படி சொல்லியனுப்பினாள். ஆதலால், ஜகத் பிதாவாய ஸர்வேஸ்வரனைப் பிரார்த்தித்துக் கேட்பதைக் காட்டிலும் தயாள தன்மையுடைய ஜகன்மாதாவைப் பிரார்த்தித்துக் கேட்டால் விரும்புவதைப் பெறுவது எளிது.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் தமது பத்தினியுடன் கிருகஸ்தாச்சிரமத்தில் இருந்து குடும்ப வாழ்க்கையைக் கைக்கொள்ளாததற்குக் காரணம் என்ன என்பதை ஒருவர் கேட்டார். அதற்குப் பகவான் பின்வருமாறு பதில் சொன்னார்:

ஒருநாள் கார்த்திகேய பகவான் தம் நகத்தால் ஒரு பூனையைக் கீறிவிட்டு அன்னையிடம் திரும்பினார். தமது அன்னையின் கன்னத்தில் விரலால் கீறிய அடையாளம் ஒன்று இருப்பதைக் கண்டார். கண்டதும், 'தாயே! உனது கன்னத்தில் இத்தவடு எப்படி உண்டாயிற்று'' என்று கேட்டார். ஜகன்மாதாவானவள், 'குழந்தாய்! இது உன் கைங்கரியம்தான், உனது கை நகத்தின் வேலை என்றாள். கார்த்திகேயர் திடுக்கிட்டு ''எப்படியம்மா! நான் உன்னை ஒருபோதும் கீறியதில்லையே' என்றார்.

குழந்தாய்! இன்று காலையில் நீ ஒரு பூனையைக் கீறியதை மறந்துபோய் விட்டாயா?''

''ஆமாம் கீறினேன். ஆனால் உன்னுடைய கன்னத்தில் வடு ஏற்பட்டதன் காரணம் என்ன'',

''குழந்தாய்! உலகத்தில் உள்ள சகல ஜீவராசிகளிலும் நான் இருக்கிறேன். சகல சிருஷ்டியும் நான்தான். ஆதலால், நீ யாரை வருத்தினாலும் அது என்னை வருத்துவதாக இருக்கும்.''

இதைக் கேட்டதும் கார்த்திகேயருக்கு அதிக ஆச்சரியம் உண்டாயிற்று. மேலும், அவர் ஒருவரையும் கல்யாணம் பண்ணிக்கொள்வதில்லை என நிச்சயித்தார். ஏனெனில் அவர் யாரைக் கல்யாணம் செய்து கொள்வது? ஒவ்வொரு ஸ்திரீயும் அவருக்குத் தாய் அல்லவா? ஆதலால் அவர் கல்யாணம் செய்து கொள்ளவில்லை. நான் கார்த்திகேயரைப் போன்றிருக்கிறேன். ஒவ்வொரு ஸ்திரீயும் எனக்குத் திவ்யமாதாவாகவே தோன்றுகின்றனள் வட நாட்டில் கார்த்திகேயர் எப்போதும் பிரமச்சாரியாகவே இருக்கின்றார். என்ற கொள்கையை மக்கள் கொண்டிருக்கிறார்கள்.

திருமதி
செ. அருணானந்தம்

நன்மை என்பது செயலில் காணும் அன்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் வயதில் ஞானச்சுடர்......

"நூலொரு மேனியும் பொருளொரு வண்ணமுமாக" வளர்ந்து வரும் தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் சேவை அளப்பரியது. தானங்களில் சிறந்த தானம் அன்னதானம் என்பர். அந்தவகையில் அன்னதானம் ஒரு புறம், மறுபுறம் அறிவை வளர்க்கும் மலர் வெளியீடு என்று வாறாக அமைகின்றன.

இந்த வகையில் 21-ம் நூற்றாண்டில் காலடி வைக்க இருக்கும் எமக்கு அறிவினை ஊட்டுகின்ற ஒரு வழியில் ஞானச்சுடர் விளங்குகின்றது. ஆரம்பத்தில் ஒரு சாதாரண நிலையில் வெளிவந்த சுடர் இன்று அழகிய அட்டையுடன் பல சிறப்பு வாய்ந்த இந்த நூலானது பல கருத்துரைகளை வழங்கி வருகின்றது. அறிஞர் பெருமக்களில் இன்றும் பலர் இலைமறை காயாகவே மறைந்திருக்கின்றனர். அவர்களது ஆற்றலை வெளிக்கொணரு வகையும் அமைத்துக் கொடுக்கின்றது. அது மட்டுமன்றி தரமான கட்டுரை பயனுள்ள செய்திகள் மனதைப் பண்படுத்தும் அறிவுரைகளையும் வழங்குகின்றது ஞானச்சுடர். இங்கு ஞானச்சுடர் என்ற சொல்லை ஆராய்கின்றபோது ஞானம் என்பது முத்தி அல்லது தத்துவம் என்று கருதப்படுகின்றன. சுடர் என்பது ஒளி எனப் பொருள் படுகின்றன. எனவே ஞானச்சுடர் என்பது இருளை அகற்றி தத்துவ ஒளியைக் கொடுப்பது என்பதாகும்.

இச்சுடரை வாசிக்கின்றபோது தானாக ஒரு பயபக்தி எம்மிடத்தே உருவாகின்றன. அதாவது அறியாமையை அகற்றுகின்றன. இவை மாத்திரமன்றி மாணவர் பக்கம் என்ற ஒரு பகுதினூடாக மாணவர்களது அறிவை வளர்க்கின்றன. தமிழ்மொழி பற்றிய அறிவு மட்டுமன்றி ஆங்கில அறிவையும் வளர்க்கின்றன.

இது மட்டுமன்றி பல பொலிவுகள் பெற்று இன்னும் இனி எண்ணும் ஞானச்சுடர் வளர வேண்டும் என்பதே பல அறிஞர்களது பெருவிருப்பு. இம் மலரை வெளியிடுகின்ற சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் பணி வளர சந்நிதி முருகனை வேண்டுகிறேன். 1998-ல் தைத்திங்களில் ஆரம்பித்த ஞானச்சுடர் 2-ம் வயதை நிறைவு செய்து தனது 3-ம் வயதில் காலடி வைக்கின்றது புத்தாயிரம் ஆண்டில் புதுப்பொலிவுகள் பெற்று ஞானச்சுடர் வெளிவர சந்நிதியானை வேண்டுகிறேன். ஞானச்சுடர் மலர்க் குழுவையும், ஞானச்சுடர் மலரையும் வாழ்த்துகிறேன். நன்றி.

ஆக்கம்: சி. சரவணன்

மனதை ஒருநிலைப்படுத்துதலே வெற்றிக்கு அடிப்படை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தெய்வம் உள்ளது" என்ற நம்பிக்கையை வளர்த்துக்கொள்வோம்

இன்றைய சூழ்நிலையில் தெய்வம் உண்டா? இல்லையா? என்ற மனப்போராட்டம் எழுகின்றது. இந்த வேண்டாத மன எழுச்சியை தள்ளிவிட்டு "தெய்வம் உண்டு" என்று அழுத்திக்கூற முற்படுங்கள். யார் சொன்னாலும் எந்தவித எதிர்ப்புச்சக்திகள் வந்தாலும் முழுநம்பிக்கையுடன் "தெய்வம் உள்ளது" என்ற மகத்தான மந்திரத்தைத் தைரியமாக உச்சரித்து வாருங்கள்.

தெய்வம் இல்லை எனின் இப் பிரபஞ்சத்தின் விசித்திரமான விளைவுகள் எப்படி நிகழ்கின்றன. எண்ணிக்கையற்ற கோடிக்கணக்கான நட்சத்திரங்கள் பூமியில் விழாது பவனிவருகின்றன அச்சு இல்லாமல் பூமி எப்படி சூரியனை சுற்றி வருகின்றது. யந்திரமான சாதனமும் இன்றி எப்படி காற்று வீசுகின்றது

மலர்களுக்கு நிறமும் கரும்பிற்கும் சுவை கொடுப்பவன் யார்?

இறைவன், அதாவது மெய்ப் பரம்பொருளை இந்துக்கள் சிவம், முருகன், ஆறுமுகன், வேறுபல பெயர் இட்டும் கிறிஸ்தவர்கள் யேசு என்றும், பௌத்தர்கள் புத்தபிரான் என்றும், இஸ்லாமியர் நபிகள், சாயிபகவான் என்றும் அழைப்பர்.

திரைமறைவில் நின்று நிகழ்ச்சியை நடத்துபவன் போல மறைந்து நின்று கொண்டு இப் பிரபஞ்சத்தை ஆட்டுவிக்கின்றான். தான் புலப்படாமல் இருந்து கொண்டு எல்லாவற்றையும் இயக்கிக் கொண்டிருப்பது தெய்வம் அன்றி வேறு ஒன்றுமில்லை. எனவே இன்றைய காலகட்டத்தில் தெய்வ நம்பிக்கையை வளர்த்துக் கொள்ளுங்கள்.

இதற்கு ஓர் கதையுண்டு

இங்கிலாந்தில் ஒரு மனிதர் எப்போதும் தெய்வ நம்பிக்கையையும் இறை சிந்தனையையும் கொண்டு பிறருக்கு அவர்கள் அனுப்பும் கவர்களுக்கு விலாசம் எழுதிக் கொடுத்துவந்தார்.

அப்படி அவர் எழுதும் போதெல்லாம் ("May God Bless You") "இறைவன் உமக்கு அருளுவாராக" எனத் தவறாமல் வாழ்த்துவார். ஓய்வு நேரங்களில் சிறுவர்களுக்கு பாடம் கற்றுக் கொடுப்பார். முதலில் (Trust in God) "இறைவனிடம் நம்பிக்கையை வை" என்று போதிப்பார். இப்படியே தான் செய்யும் ஒவ்வொரு செயல்களையும் இறைவன் அருளாகவே அவருடைய கட்டளையாகவே நம் எண்ணத்துடன் செய்து வந்தார்.

பிற்காலத்தில் இவரே இங்கிலாந்து தேசத்து பிரமுகர்களில்

நல்லவனைக் கண்டுபிடி, நல்லவனாக நடிக்காதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவராக வந்தார் அவர் பெயர் தேர்ஸ் நொட்டோவால்

அவர் ஒவ்வொரு செயல்களையும் இறை சிந்தனையுடன் செய்தவர் அல்லவா? அது தெய்வ சக்தியைப் பெருக்கச் செய்து அவரது வாழ்க்கையை உன்னதமானதும் பலராலும் போற்றப்பட்டதுமாக உயர்த்தியது.

எனவே ஒவ்வொரு மனிதனும் செயற்கரிய நற்காரியங்களை செய்யும் போது அது இறைவனின் செயலாக அதாவது எங்கள் ஆனைமுகனின் தம்பி ஆகிய முருகப் பெருமானின் கிடைத்தற்கரிய பணியென கருதவேண்டும்.

நாட்டின் அமைதியை வேண்டி முருகப் பெருமானின் அருளை வேண்டி நிற்கின்றோம்.

ம. செந்தூரன்

## இல்லை என்ற வார்த்தையை......

அடியார்களின் பசிப்பிணியைப் போக்குவதை விரதமாகக் கொண்டவர் இளையான் குடிமாற நாயனார். அகால வேளையில் வந்த அடியாரின் பசிப்பிணியைப் போக்குவதற்கு எதுவும் இல்லாமல் துன்பப்பட்ட கணவருக்கு சமையலுக்கு வேண்டிய ஒவ்வொரு பொருளைப் பெறுவதற்கும் வழி காட்டியாக இருந்தார் அவரது மனைவி. இறுதியாக கறி சமைப்பதற்கு குப்பையில் முளைத்திருக்கும் கீரையைப் பிடுங்கி வருமாறு கணவருக்கு ஆலோசனை கூறி அந்தக் கீரையிலேயே நான்கு கறிகள் சமைத்து அடியாரின் பசிப்பிணியைப் போக்கி தனது கணவரின் தொண்டிற்கு உறுதுணையாக இருந்தார்.

ஆனால் இன்றைய பெண்களில் அதிகமானவர்கள் வீட்டுப் பொருட்கள் முடிவடைவதற்கு முன்பே இல்லை என்ற வார்த்தையை அதிகம் பயன்படுத்துகின்றனர். இது தவறானது. உண்மையில் பொருட்கள் முடிவடைந்தாலும் இல்லை என்ற வார்த்தையைப் பெண்கள் பயன்படுத்தக் கூடாது. அதனை இங்கிதமாகவும், பக்குவமாகவும் வேறு வார்த்தைகளால் கூறப் பழக வேண்டும்.

மலர் வெளியீட்டில்
திருமதி மங்கையற்கரசி சிற்றம்பலம்

இளமையில் சோம்பல் முதுமையின் வறுமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணத்தின் பின்

நாம் எல்லோரும் உயிருடன் இருக்கும் போது எடுத்துள்ள சரீரம் ஸ்தூல சரீரமாகும். இறந்த பின்பு ஆன்மா தங்கும் சரீரம் சூக்கும சரீரமாகும். இது கண்ணுக்குப் புலப்படுவதில்லை.

பிரார்த்தனைகள் நல்லெண்ணங்கள், கீர்த்தனைகள், பஞ்சபுராணங்கள், சிவபுராணம் ஆகியவற்றை ஓதுதல் உடலைத் துறப்பவர்களுக்கு உதவியாயிருக்கின்றன. இறந்தவர்களுக்குச் சொல்லொணாத உதவியை அளிக்கின்றன. உடலைத் துறந்த ஆன்மாக்கள் விண்ணுலகம் நோக்கி முன்னேறுவதற்கும், இடைவழியில் அவை அமைதியாகச் செல்வதற்கும் பெருந்துணை செய்யும் பலத்த சக்தியாகும்.

உடலைத் துறந்த ஆன்மாக்கள் மரணமடைந்தவுடன் உணர்வற்ற நிலையிலிருக்கின்றன. அவை முன்னைய ஸ்தூல சரீரத்திலிருந்து பிரிக்கப்பட்டிருப்பதை உணர்வது இல்லை. உறவினர்கள், நண்பர்கள், சகோதரர்களின் பிரார்த்தனை, கீர்த்தனைகள், புராணங்கள், பிரிந்த ஆன்மாக்களுக்கு ஆறுதலை அளிக்கின்றன. மயங்கிய சோர நிலையிலிருக்கும் ஆன்மாக்களுக்கு சக்தியையும், விழிப்பையும் ஊட்டி, மறைந்த உணர்வைத் திரும்பவும் கொண்டு வருகின்றன. ஆன்மாக்கள் தாங்கள் உண்மையில் ஸ்தூல சரீரத்திற்குள் இல்லையென்பதை அறியத் தொடங்குகின்றன.

பின்பு அவை குறுகலான ஆகாச ஆறாகிய எல்லை நிலத்தைக் கடக்க முயல்கின்றன. இதை இந்துக்கள் வைதரணி என்றும், பார்சிகள் சின்னத் பாலம் என்றும், முகமதியர் ஸிராத் என்றும் சொல்வர்.

உறவினர்களின் அழுகையும், அரற்றலும், அடக்க முடியாத துக்கமும் அவற்றிற்கு துன்பம் தந்து இழுக்கின்றன. இவை சுவர்க்கத்திற்கு செல்லும் வழியில் பெருந் தடையை விளைவிக்கும். இதனால் அவற்றிற்குத் துன்பமுண்டாகிறது. அவை அமைதியில் ஆழ்ந்து சுவர்க்கத்தில் பிரகாசத்தோடு விழிப்பு அடையத் தயாராக இருக்கும் போது உறவினர்கள் அழுது புலம்புவதால் இவ்வுலக வாழ்வின் ஞாபகம் நன்கு கிளறப்படுகிறது. அவர்களுடைய எண்ணங்கள் அவற்றின் மனங்களிலும் அதே போன்ற அதிர்வுகளை உண்டாக்கித் தீவிர துன்பத்தை விளைவிக்கிறது.

ஆகவே உறவினர்கள் பிரிந்த ஆன்மாவின் சாந்தியின் நிமித்தம் பஜனைகளையும், புராணங்களையும் ஓத வேண்டும். வீணாக அழுது, குழறி ஆர்ப்பரிக்கக் கூடாது. பலபேர் சேர்ந்து கூடிச் செய்யும் பஜனைகள் பயனுள்ளதாயிருக்கும். பகலில் மௌனம் இடைவிடாது செய்து வரவேண்

சூதாட்டக்காரனுக்கு எதுவும் புனிதமில்லை

றோம். அப்போதுதான் மரணகாலத்திலும் கடவுள் சிந்தனை தானாக உண்டாகும். அப்போது நிலைகலாமென்பது மின் மதிப்பீடாம்.

கீதையில் பகவான் கண்ணன் "எவன் இவ்வுடலைத் துறக்கும் போது மரணகாலத்தில் என்னை சிந்தித்தபடி செல்கிறானோ அவன் என் இருக்கையை அடைகின்றான் இதில் சந்தேகமில்லை" என்று கூறினார்.

மரணத்திலிருந்து எப்படித் தப்பலாமென்று நசிகேதனுக்கு யமன் பின்வருமாறு கூறினான். "அழிவற்ற பதத்தை அடையும் வழியை உனக்கு கூறுகின்றேன். மனிதன் ஆசைகளால் கட்டுண்டு உள்ளான் ஆசைகள் புலன்களால் பிறந்தவை. இவை அவனை ஜனன, மரண சக்கரத்தில் பிணைக்கின்றன. அவன் ஆசைகளை ஒழித்து மனத்தையும், புலன்களையும் அடக்க வேண்டும். இதுவே கொள்ளத்தக்கது.

இதய குகையில் உறையும் ஏகமானதும், நித்தியமானதுமான ஆன்மாவைத் தியானம் செய். பரமாத்மாவிடம் மனத்தை நிலை நிறுத்து புலன்களின் ஆசைகளை அழித்து விடும் போது அஞ்ஞானத்தின் மூன்று முடிச்சுகள் அறுகின்றன. அப்போது நீ பிரம்ம ஞானத்தையடைவாய். இவ்வாறு நீ மரணத்தை வெல்லக் கூடும்" யமனால் கூறப்பட்ட ஞானத்தையும், யோகத்தைப் பற்றிய உபதேசத்தையும் அடைந்த நசிகேதன் ஆசா பாசம், மரணம் ஆகியவற்றிலிருந்து விடுபட்டு பிரம்மத்தையடைந்தான்.

மரணத்திலிருந்து மோட்சப் பதவியை அடைவதற்குரிய மந்திரம் மஹா மிருத்யுஞ்ஜய மந்திரமாகும். அது பின்வருமாறு.

"ஓம் த்ரயம் பகம் யஜா மஹே
சுகந்திம் புஷ்டி வர்த்தனம்
உர்வாருக மிவ பந்தனாத்
மிருத்யோர் முக்ஷிய மாம்ருதாத்"

இதன் பொருள் பின்வருமாறு:-

நறுமணம் நிறைந்தவரும், ஜீவராசிகளைப் போஷிப்பவரும், முக்கண்ணையும் ஆகிய சிவபெருமானை வணங்குகின்றோம். ஒரு வெள்ளரிப்பழம் எப்படிக் கொடியிலிருந்து விடுபடுகிறதோ அப்படியே நம்மையும் மரணத்திலிருந்து விடுவித்து மோட்சத்தை அருள்வீராக.

இம்மந்திரத்தின் தன்மைகள்:-

இது ஒரு உயிர் வழங்கும் மந்திரமாகும். பாம்புக்கடி, மின்னல், மோட்டார் விபத்துக்கள் இன்னும் பல விபத்துக்களிலிருந்து மரணம் ஏற்படுவதைத் தடுக்கும். நோய் நிவர்த்திக்கும் சக்தியுமுண்டு. தவிர இதை நம்பிக்கையோடும், உண்மையோடும், பக்தியோடும் பாராயணம் செய்யின் மருத்துவர்களால் நிவர்த்தியாகாத பிணிகளையும் போக்கிறது. மரணத்தை வெல்லக் கூடிய மோட்ச மந்திரமாகும். அது நீண்ட ஆயுள், சாந்தி செல்வம், நல்வாழ்வு, மனத் திருப்தி ஆகியவற்றையும் அளிக்க வல்லது.

திருமதி சந்திரலீலா நாகராஜா

தானத்திற்கு முன்பே வெற்றுறைத் தேர்ந்திடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வச் சந்நிதி முருகோனே!

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

செல்வச் சந்நிதி முருகோனே
தேவர் ஆரம் தீர்த்தோனே
அல்லும் பகலும் எந்நாளும்
ஆறு முகனே வடிவேலா
சொல்லுள் அடங்காச் சிவபாலா
தோகை வள்ளி மணவாளா
வல்ல வினைகள் கடந்தோட
வருவாய் கிருபை தருவாயே
நாம கேது எனவந்து
துயரம் கொடுக்கு பிணச் சிக்கல்
நாமமின்றிக் கரைந் தோட
நல்லோய் அருள்வ தெப்போது?
காம குரோத வஞ்சனைகள்
கருமி யொழிய எந்நாளும்
ஏமமாக நிற்போனே
இதயத் திருந்து அருள்வாயே
அகந்தை கொண்டு புவிமீது
அசுரர் துன்பம் செயற்கண்டு
நெகிழ்ந்து வாடியுன் பாதம்
நினைந்த போது நெகிழ்ந்தோனே
இகழ்ந்து மாய வுலகத்தை
எல்லாம் நீயே என்பார் முன்
மகிழ்ந்து காட்சி கொடுப்போனே
மாய முடிக்கும் மருகோனே
தூய சிவனார் நெற்றிக்கண்
தோன்றிச் சரவணப் பொய்கையிலே
தாயார் அறுவர் அமுதூட்டத்
தவழ்ந்த மழலைக் குமரேசா
காயமெடுத்த நாள் தொட்டுக்
கவலைக் கிரையாய் உழல்கின்ற
மாய வுலகோர் துயர் தீர்க்கும்
மயில் வாகனனே அருள்வாயே.

கவைர. செ. சுந்தரம்பிள்ளை

★ மரணத்திற்கு அஞ்சாதவனே வாழத்தகுதி பெற்றவன். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாண்டவ்யர்

எய்த அம்பு எய்யப்பட்டவன் மீது எய்துவதுபோல் நாம் முன் செய்த வினை நியதி தவறாது நம்பால் பொருந்தியே தீரும். மெய்த் தவ முனிவரும் செய்த வினையை அனுபவித்தேயாக வேண்டும்.

நிலத்தில் இட்ட சிறுவிதை பெருமரமாகிக் கிளைத்துத் தோன்றுவதுபோல், நாம் செய்த சிறு வினை வளர்ந்து பெரும்பயனாக விளைந்து வரும் என உணர்க. ஆதலால், நாம் மனவாக்குக் காயங்களால் வினைசெய்தல் கூடாது. ஈட்டிய தினையளவு வினை பனையளவாக வந்து மூளும்.

மாண்டவ்யர் என்ற ஒரு மாதவ முனிவர் கானகத்தில் பேராசைத் துறந்து, வானகம் போற்றத் தவஞ் செய்து கொண்டிருந்தார். பொறி புலன்களை வென்றார். ஐம்பெருந் தீயின் நடுவில் நின்றார். மனத்தை அடக்கிக் கடுந்தவம் பல புரிந்தார்; அவர் தவம் புரியும்போது இரவில் அவர் சிரத்தில் தவவொளி எழுந்து காட்டின் இருளை அகற்றியது.

அப்பெருந்தவ முனிவர் புண்ணிய நதிகளிற் சென்று நீராடுவார். சதா சிவசிந்தையுடன் பற்றற்றவராகித் திரிவார். சிவயோக நெறி நின்றார்.

அவர் சாலவ தேயத்தின் அருகில் ஓர் ஓலைக்குடில் அமைத்து அதில் இருந்து ஒருமையுடன் தவஞ் செய்து கொண்டிருந்தார்.

சில கள்வர்கள் சாலவ மன்னனுடைய அரண்மனையில் களவு செய்துவிட்டுச் சென்றார்கள். காவலர்கள் அவர்களைத் தொடர்ந்து விரட்டிச் சென்றார்கள். கள்வர்கள் இனி ஓடித்தப்ப இயலாதென உணர்ந்து மாண்டவ்ய முனிவருடைய பன்னசாலைக்குள் நுழைந்து பொன்னும் மணியும் பொதிந்த மூட்டைகளை அவர் முன் வைத்து விட்டு மூலைகளில் பதுங்கிக் கொண்டார்கள்.

தேடிவந்த காவலர்கள் குடிலுக்குள் நுழைந்து, மாண்டவ்யரையும் கள்வர்களையும் பற்றிக் கொண்டு பொன்மணிகளை எடுத்துக்கொண்டு அரசன் முன் நிறுத்தினார்கள்.

“வேந்தர் பெருமானே! இக் கள்வர்கள் இரவு தமது அரண்மனையில் இப்பொன்னையும் மணியையுந் திருடினார்கள். இவன் இக் கள்வர்கட்குக் குரு; கையும் களவுமாகப் பிடித்துக் கொண்டு வந்தோம்” என்றார்கள்.

மன்னவன் அவர்கள் கூற்றினை நம்பி கள்வர்களைக் கொல்லுமாறும் மாண்டவ்யரைக் கழுவின் ஏற்றுமாறும் கட்டளையிட்

கற்றவரே சுதந்திரமானவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டான். அவ்வண்ணமே கள்வர்களைச் சிரச்சேதஞ் செய்தார்கள். மாதவ முனிவரைக் கழுவில் ஏற்றினார்கள்.

"காவலர்களே! நீங்கள் கூறியபடி இவன் கள்வர்களின் குருவாதலால் இவனையறியாத வண்ணம் இரவில் காவல் செய்யுங்கள்; இவனுடைய சீடர்கள் இரவில் இவனைக் காண வருவார்கள். வந்தவர்களைப் பிடித்து வாருங்கள்" என்று மன்னன் கூறினான். அதுபடி கழுமரத்தின் அருகில் காவலர்கள் ஒளிந்திருந்தார்கள்.

கழுவில் மாண்டவ்யர் இருதங் கெழுத்தை நியமவண்ணம் தொங்கிக் கொண்டிருந்தார். அவர் உடம்பெல்லாம் சிறுசிறு ஊசிகள் சொருகப்பட்டிருந்தன. பெரிய ஆணி நெஞ்சிலிருந்து வருத்தியது. அவர் அவற்றை மறந்து, சித்தத்தைச் சிவன்பால் சேர்த்துத் தவநிலையில் தொடங்கினார்.

மூன்று தினங்கள் கழிந்தன. ஒருநாள் விடியற்காலை அத்திரி, மரீசி, அங்கிரசர், புலஸ்தியர், பிருகு, வசிஷ்டர், காசிபர் முதலிய முனிபுங்கவர்கள் விண்வழியே சென்றபோது மாண்டவ்யர் கழுவில் தொங்குவதைக் கண்டார்கள். உள்ளம் இரங்கிவிட்டார்கள். மண்ணிடை வந்தார்கள். மாண்டவ்ய முனிவரைக் கைகூப்பித் தொழுதார்கள்.

"தபோதனரே! தங்கட்கு இந்த இடர் எவ்வாறு நேர்ந்தது; தாங்கள் நினைத்தால் மேருகிரி பொடியாகுமே? ஏழு கடல்கள் வற்றித் திடராகுமே! விண்ணும் மண்ணும் வெந்து சாம்பலாகுமே? எந்தப்பாவி தங்களைக் கழுவில் இட்டவன்? 'அழிக' என்று ஒரு சொல் தங்கள் வாக்கிலிருந்து வந்தால் அவன் குலத்துடன் அழிவானே! பொறுமையின் பொக்கிஷமே! சாந்தமூர்த்தியே! தயாசாகரமே! குணக்குன்றமே! இது என்ன விந்தை? அல்லது தாங்களே இப்படி ஒன்றை அமைத்துக் கொண்டீரா? இது எந்த வகையான அவம்? தங்களை இப்படி எவரேனும் இடர் புரிந்தால் எங்கட்கு உத்தரவு கொடுங்கள். அவர்களைப் பிடி சாம்பலாக எரிக்கின்றோம்" என்றார்கள்.

மாண்டவ்யர் "முனிகணங்களே! வணக்கம். 'உற்ற நோய் நோன்றல், உயிர்க்கு உறுகண் செய்யாமை, அற்றே தவத்துக்கு உரு' என்றபடி வருகின்ற துன்பத்தைப் பொறுமையுடன் தாங்கிக் கொள்வதுவே தவத்துக்கு ஓர் அங்கமாகும். ஆகவே, என்னை ஒருவரும் கழுவில் ஏற்றவில்லை. என்னை ஏற்றியது வினை. வினையை நோக வேண்டுமேயன்றி வேறு யாரையும் நோவக்கூடாது. தவஞ் செய்வோர்க்குப் பொறுமையே அணிகலம். ஒரு கட்டடத்தைக் கடைக்கால் தாங்குவதுபோல் தவத்தைப் பொறுமை தாங்குகின்றது. நீவிர் இது பற்றி வருந்தற்க. உமக்கு மறுபடியும் வணக்கம். சென்று வாருங்கள்" என்றார்.

செல்வச் செருக்கு தலைகாட்டியே தீரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனிபுங்கவர்கள் அவருடைய அருளுடைமையறிந்து உள்ளம் உவந்து மீண்டும் வான்வழியே சென்றார்கள்.

இவற்றையெல்லாம் உற்றுக் கேட்டுக் கொண்டிருந்த மற்றோர்கள் அதி அற்புதம் அடைந்தார்கள். மன்னவன்பால் ஓடிச்சென்று அஞ்சலி செய்தார்கள். 'மாண்புமிக்க மன்னரே! நாங்கள் கண்ட காட்சியை என்ன என்று கூறுவோம். ஆ! ஆ! ஆச்சரியம் சோதி மயமான உடம்பு பெற்று பல முனிபுங்கவர்கள் வானிலிருந்து இறங்கி, கழுவில் இருப்பவரை வணங்கி நின்றார்கள். தாங்கள் கருதினால் உலகம் நிற்குமோ? தங்களை இவ்வாறு செய்தவன் யார்? நாங்கள் சாபம் இடுவோம்' என்றெல்லாம் பலப்பல பகர்ந்தார்கள் கழுவில் உள்ள மகான் அவர்களை நோக்கி ''என்னை ஒருவரும் கழுவில் ஏற்றவில்லை; என் வினையே என்னை ஏற்றியது. பொறுமையே பூஷணம். நீங்கள் ஆறுதலாகச் செல்லுங்கள்' என்றார். இன்னும் சிறந்த பல அருளுரை கூறினார். அவர்கள் பணிந்தபடி ஆகாய மார்க்கமாகச் சென்றார்கள். கந்தர்வ மண்டலம் போல் மறைந்து விட்டார்கள். இந்த அரிய காட்சியைக் கண்ணாரக் கண்டோம் என்றார்கள்.

வேந்தன் இவ்வசனங்களைக் கேட்டு நடுநடுங்கினான், தன் அறியாமைக்குப் பெரிதும் வருந்தினான். அரசாட்சியையே வெறுத்தான். பரிசனங்களுடன் ஓடினான்.

கழுவில் இருந்து முனிவர் பெருமானை மெல்ல இறக்கினான். உடம்பில் தைத்திருந்த ஊசிகளை யெல்லாம் எடுத்தான். நெஞ்சில் இருந்த கம்பி ஆணியைப் பிடுங்கினால் அவருடைய திருமேனி வருந்தும் என்று கருதி அரத்தைக் கொண்டு அராவினான். ஆணி சிறிது சிறிதாகத் தேய்ந்து கொண்டே வந்தது. இன்னும் நான்கு விரற்கடையிருக்கும்போது ''முனிவர் வேந்தே! போதும். இது இப்படியே இருக்கட்டும். எனக்கு இது அனுகூலம் புரியும். என்ன அனுகூலம் என்றால் நான் சிவபூஜை செய்பவன். பூசைக்கு மலர் எடுப்பேன். குடலை கொண்டு போவேன். பூக்குடலையை இடுப்பிலே தொங்கவிடக் கூடாது. குடலையை உயர்த்தி ஒரு கையில் பிடித்துக் கொண்டு மற்றொரு கையால் மலர் பறிப்பேன். இப்போது நெஞ்சில் உள்ள ஆணியில் பூக்குடலையை மாட்டிவிட்டு ஒரு கையால் பூஞ்செடியை வளைத்து மற்றொரு கையால் மலர் எடுக்க மிகவும் உதவியாக இருக்கும். ஆகவே மலர்க்குடலை மாட்டி வைக்க இந்த ஆணி பயன்படும்' என்றார். அவருடைய சிவபக்தியின் பெற்றியைக் கண்டு அரசனும் அருகில் இருந்தோரும் அழுதார்கள். அவருடைய அருளுடைமையை நோக்கி உள்ளம் உருகினார்கள். பன்முறை அவரைப் பணிந்தார்கள்; பலபடியில் தந்து உபசரித்தார்கள்.

முனிவர் அவர்களை வாழ்த்தி விட்டுச் சென்றார். பின்னர் காட்டில் மிகப் பெருந்தவம் புரிந்தார்.

எதிலும் நம்பிக்கை வைத்தே செயற்படுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் ஒரு சமயம் பலவுலகங்களைப் பார்த்து வந்தார் சத்தியவுலகம், பொன்னுலகம், நாகவுலகம், வருணனுலகம், யமனுலகம் முதலியவைகளைப் பார்த்தார். யமலோகத்தில் அறக்கடவுள் இவரை அன்புடன் பணிந்து இன்னுரை பகர்ந்து உபசரித்தார்.

மாண்டவ்ய முனிவர் அறக்கடவுளை வாழ்த்தினார். ''அறக்கடவுளே! ஓர் ஐயம். நான் இப்பிறப்பில் எந்த உயிர்கட்கும் ஓர் அணுத்துணையேனும் இடர் புரிந்தேனில்லை. இந்த ஆணி என் நெஞ்சில் தைப்பதற்கு நான் என்ன குற்றம் புரிந்தேன்? கூறும் என்று கேட்டார்.

அறக்கடவுள் ''ஐயனே! தாங்கள் முற்பிறப்பில் சிறுபிள்ளைப் பருவத்தில் தும்பியைப் பிடித்து அதன் வாலைக் கிள்ளிவிட்டு ஒரு முள்ளைச் சொருகிப் பறக்கவிட்டு விளையாடினீர். அவ்வினை இவ்வினையாக மூண்டது'' என்றார்.

முனிவர் நகைபுரிந்து ''அறக்கடவுளே! அறிவு முதிராத சிறு பருவத்தில் செய்த வினை என்னை யடையலாமா? கண்டித்து நல்வழிப்படுத்தாத தாய் தந்தையரைச் சாரவேண்டும்.''

இன்றுமுதல் நான் ஒரு நியதி செய்வேன். இந்த அறத்தின் ஒரு திருத்தம் புரிவேன். ''ஒரு பாலகன் பதினான்கு ஆண்டுகள்வரை செய்த நல்வினை தீவினைகளில் ஒரு பகுதி தாய் தந்தையரைச் சாரக்கடவது. நீயும் மானுடவுலகில் மனிதனாகப் பிறக்கக்கடவது'' என்று கூறிச் சென்றார். அதுபடி அறக்கடவுள் விதுரனாகப் பிறந்தார்.

அன்றுமுதல் அறநெறியில் அந்த ஒரு திருத்தம் ஏற்பட்டது. மக்கள் 14 ஆண்டுகள்வரை புரியும் வினைகளில் ஒரு பகுதி மாதா பிதாக்களைச் சேரும் என்பது.

ஆணி நெஞ்சில் இருந்தபடியால் அவர் ஆணிமாண்டவ்யர் எனப் பெற்றார்.

ஆகவே, நாம் இளம்பிள்ளைகளை நல்வழிப்படுத்த வேண்டும். எவ்வுயிர்க்கும் இடர் புரியாதிருக்க வேண்டும்.

தொகுப்பு:
சந்நிதியான் ஆச்சிரமம்

தீமை செய்ய யாரையாவது தூண்டிவிட நினைத்தாலே போதும்; அந்தத் தீமையைச் செய்து அவர் பெறப் போகும் தண்டனையை விட பல மடங்கு தண்டனைகள் தூண்டிவிட்டவரைத் தேடி ஓடி வரும்.

முட்டாள்தனத்தைத் தவிர வேறுபாவம் கிடையாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைவாணியின் சொரூப தத்துவங்கள்

இந்து மதத்தை அறுவகைச் சமயங்களாக வகுத்துள்ளனர். அவை சைவம், சாக்தம், வைணவம், காணபத்தியம், கௌமாரம், சௌரம் என்பனவாம். இச் சமயங்களுக்குரிய முழுமுதற் தெய்வங்களிடத்தில், அவற்றின் உடல்களிலோ அல்லது அவற்றில் உறுப்புக்களிலோ ஏதோ சில வகைப் படைக்கலங்கள் அல்லது கருவிகள் அல்லது பொருட்கள் இருப்பதை நாம் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. இந்த அடிப்படையில் நாம் நோக்கும் போது சிவபெருமானிடத்தில் உடுக்கு, திரிசூலம், கங்கை, பிறைச்சந்திரன், அரவு, உருத்திராக்கமாலை, கபாலமாலை முதலியவைவற்றைக் காணலாம். பராசக்தியிடம் வில், வேல், வாள், மழு, ஈட்டி, சூலம் இவை போன்ற பல படைக்கலங்களைக் காணலாம். மகாவிஷ்ணுவிடம் சங்கு சக்கரம், ஐந்துதலை நாகம் முதலியனவற்றைக் காணலாம். கணபதியிடத்தில் அங்குசம், மோதகம், பெருச்சாளி முதலியவற்றைக் காணலாம். முருகனிடத்தில் வேல், சேவல், மயில் முதலியவைவற்றையும் காணலாம்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள இத்தெய்வங்களிடம் படைக்கலங்கள், கருவிகள், பொருட்கள் காணப்படுவதற்கு ஏதோ சில, பல காரணங்கள் இல்லாமலில்லை. அவை அந்த சமயம் சார்ந்த வரலாறுகளை விளக்குவனவாகவோ அல்லது சமய தத்துவங்களை விளக்குவனவாகவோ அல்லது மக்களுக்கு நல்ல [illegible] அறிவைப் புகட்டுவனவாகவோ இருக்கலாம். உதாரணமாக நடராச விக்கிரகம் பஞ்சகிருத்தியங்களை விளக்குவதாக அமைந்துள்ளது. இதே போன்று தான் கங்கை, பிறைச்சந்திரன், அரவு, புலித்தோல், நெற்றிக்கண், சூலம் முதலியனவும் சைவசமயம் சார்ந்த வரலாற்றையும் தத்துவங்களையும் விளக்குகின்றன. அன்னை பராசக்தியிடம் காணப்படும் படைக்கலங்கள், விஷ்ணுவிடம் காணப்படும் சங்கு, சக்கரம், பாம்பு முதலியனவும் கணபதி இடத்திற் காணப்படும் அங்குசம், மோதகம், பெருச்சாளி முதலியனவும் கந்தனிடத்திற் காணப்படும் வேல், மயில், சேவல் முதலியனவும் பல்வேறு வகையான தத்துவங்களை விளக்குகின்றன.

மேலே குறிப்பிட்ட ஒவ்வொன்றையும் பற்றி விளக்கப்புகின் கட்டுரை விரிந்து விடும். எனவே விரிவஞ்சி இவற்றை விடுத்து கலைவாணியின் சொரூப தத்துவங்களைப் பற்றிச் சற்றுச் சிந்திப்போமாக.

இப்பரந்த பூமியில் வாழும் மனிதவர்க்கத்தினரின் வாழ்விற்கு

அடக்கமே அறிவுக்கு வித்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவும் இன்றியமையாதன கல்வி, செல்வம், வீரம் முதலியவையாம். இம் மூன்றையும் நாம் பெற வேண்டும் என்பதற்காகத்தான் அன்னை பராசக்தியை துர்க்கை, லக்ஷ்மி, சரஸ்வதி என உருவகப்படுத்தி நவராத்திரி விரதம் அனுஷ்டிக்கப்படுகின்றது. கல்விக்குரிய தெய்வம் சரஸ்வதி அவளது சொரூபத்தை நாம் நோக்கும் போது அவளது வாகனமாக இருப்பது அன்னப் பட்சியாகும். இதனிடத்தில் காணப்படும் சிறப்பு பாலையும் நீரையும் வெவ்வேறாகப் பிரித்துப் பருகக்கூடியது. அவளது இருக்கை வெண்டாமரை, அவளது உடை வெண்மையானது.

"வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாள் — வெள்ளை
அரியாசனத்தில் அரசரோ டென்னைச்
சரியாசனம் வைத்த தாய்" எனப் பாடப்பட்டுள்ளது.

எனவே இந்த வெள்ளை நிறம் இருக்கிறதே அதற்கு ஒரு தனி மதிப்புண்டு. வெள்ளை தூய்மையைக் குறிக்கின்றது. அதாவது புறத்தூய்மை அகத்தூய்மையைக் குறிக்கின்றது. நமது அகத்தூய்மைக்கு இறை நாம சிந்தனைகள் இறை நாம பஜனைகள் மிகவும் முக்கியமானவை. கலைவாணிக்கு நான்கு கைகள் கற்பிக்கப்பட்டுள்ளன. கீழேயுள்ள இடது கையில் ஏட்டுச் சுவடியும் மேலேயுள்ள வலது கையில் உருத்திராக்க மாலையும் மற்றைய இருகைகளும் வீணையை மீட்டிக் கொண்டிருக்கின்றன. இவை நமக்கு எவற்றை விளக்குகின்றன என்பதை நோக்குவோம்.

ஏடு ஏந்திய கை

மனிதர்களாகிய நாம் கற்றற்குரிய நூல்களையெல்லாம் கற்க வேண்டியதன் அவசியத்தை விளக்குகின்றது. கற்றற்குரிய நூல்களாவன வேதம், ஆகமம், இதிகாசங்கள், புராணங்கள் சிறந்த இலக்கண இலக்கிய நூல்கள், நீதி நூல்கள் அகப்பொருள், புறப்பொருள் பற்றிய நூல்கள் மெய்ஞ்ஞான நூல்கள் விஞ்ஞான நூல்கள் முதலியவையாம். கல்வியை நாம் கசடறக் கற்கவேண்டும். அதாவது ஒரு சிறந்த குருவினிடத்திலோ அல்லது ஆசானிடத்திலோ ஐயந்திரிபறக் கற்க வேண்டுமென்பதை விளக்குகின்றது. மேலும் பண்டைக் காலத்தில் அரிய பெரிய பொக்கிஷங்களாக விளங்கிய நூல்கள் யாவும் ஏட்டுச் சுவடிகள் வடிவிலேயே அமைந்திருந்தன என்பதை எமக்கு ஞாபகப்படுத்துவதாகவும் கருதக் கூடியதாக இருக்கின்றது.

உருத்திராக்க மாலையை அணிந்த கை

உருத்திராக்க மாலையை வைத்திருப்பவர்கள் பெரும்பாலும்

யோகிகள், முனிவர்கள், ஞானிகள் சிவனடியார்கள் ஆவர். இவர்கள் ஓர் அமைதியான சூழலில் இருந்து கொண்டு தமது கண்களை மூடியவாறு இறை நாமங்களை உச்சாடனம் செய்து கொண்டிருப்பர். இது நூற்றெட்டுத் தரமாகவோ அல்லது ஆயிரத்தெட்டுத் தரமாகவோ அல்லது அதற்கு மேலாகவோ இருக்கலாம். அதாவது 'நமசிவாய' என்ற பஞ்சாட்சர மந்திரத்தை ஜெபித்துக் கொண்டிருப்பர். மேற்குறிப்பிட்ட எண்ணிக்கையை மறவாமலும் தவறாமலும் இருப்பதற்காக நூற்றெட்டு அல்லது ஆயிரத்தெட்டு உருத்திராக்க மணிகளைக்கொண்ட மாலையைத் தமது கை விரல்களினால் உருட்டிக்கொண்டு ஜெபிப்பர். ஆகவே நாம் கற்றதற்குரிய நூல்களைத் தெளிவாகக் கற்றபின் கற்றவற்றை மறவாமல் மீண்டும் மீண்டும் சிந்திக்க வேண்டும் நினைக்க வேண்டும் என்பதையே உருத்திராக்க மாலையை அணிந்தமை விளக்குகின்றது.

வீணையை வாசிக்கும் கைகள்

கலைவாணி தனது இரு கைகளாலும் வீணையை இசைத்துக் கொண்டிருக்கின்றாள். அந்த விரல்களைப் பயன்படுத்தி அறுபத்து நான்கு கலைகளில் ஒன்றான சங்கீதக் கலையை இனிமையாக வாசித்துக் கொண்டிருக்கிறாள். இச்செயல் எதனை விளக்குகின்றது என்றால் நாம் அரிய நூல்களைக் கற்க வேண்டும் கற்றவற்றைச் சிந்திக்க வேண்டும். பின்னர் அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதேயாகும். நாம் எந்தக் கலையையும் கற்கலாம் ஆனால் கற்றவற்றை நடைமுறைப் படுத்தாவிட்டாலோ அல்லது செயல்வடிவம் கொடுக்காவிட்டாலோ அக் கலையைக் கற்றதன் பயனை இழந்து விடுகின்றோம். இதனையே "ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது" என்பர்.

"கற்க கசடறக் கற்பவை
கற்றபின்
நிற்க அதற்குத் தக"

என்று வள்ளுவப் பெருந்தகை இதனையே செப்பினார் போலும்.

உதாரணமாக விஞ்ஞானிகள் நன்றாகக் கற்று கற்றவற்றைச் சிந்தித்து அவற்றுக்குச் செயல் வடிவம் கொடுத்ததைத் தான் அவர்கள் கண்டுபிடித்த அரிய பெரிய சாதனைகளாகும். வானொலி, தொலைபேசி, தொலைக்காட்சி, தொலைநோக்கி, மின்சாரம், கணனி போன்ற இன்னும் பலவற்றைக் குறிப்பிடலாம். ஒரு சங்கீத வித்துவான் நன்றாகக் கற்று விட்டு கற்றவற்றைத் தினமும் பயிற்சி செய்யாமலும், மேடைகளிலோ, சபைகளிலோ, இசையரங்குகளிலோ அவர் கச்சேரிகள் செய்யவில்லையென்றால் அவர் கற்ற சங்கீதக் கலையினால் என்ன பயன் அது மட்டுமல்ல தான் கற்றவற்றை மற்றவர்களுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும். அப்படியென்றால் தான் அவருக்கும் வீட்டிற்கும், நாட்டிற்கும் பயனுண்டா

பொறுமைசாலிகளின் கோபத்திற்குப் பயப்படுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும். இதுபோன்றுதான் நடனம் சித்திரம், சிற்பம், நாடகம் போன்ற கலைகளுக்கும் செயல் வடிவம் கொடுக்கவில்லையென்றால் அக்கலைகள் காலப்போக்கில் அழிந்துவிடும்.

எனவே கலை வாரியின் சொரூப தத்துவம் விளக்குவது யாதெனில் நாம் கற்றற்குரிய நாம் கலை ஆயந்திரிபறக் கற்க வேண்டும். கற்றவற்றை நன்றாகச் சிந்திக்க வேண்டும். பின் அவற்றிற்குச் செயல் வடிவம் கொடுப்பதால் நாம் கற்ற கலைகள் நமக்கும், பிறருக்கும் நாட்டுக்கும் நன்மை தரும் என்பதனை விளக்குவதே ஆகும்.

ஆசிரியர் சி. நவரெத்தினம்

## வினைப்பயன்

முற்பிறப்பில் எந்தெந்த உறுப்புகள் குற்றஞ் செய்தனவோ, அந்தந்த உறுப்புகள் துன்பத்தை அடையும்.

திருக்கோயிலிலே தெய்வ வழிபாடு செய்கின்ற கணவனுடன் வந்து வழிபடுகின்ற ஓர் அழகிய பெண்மணியைக் கடைக்கண்ணால் உற்று உற்று நோக்கியவனுக்கு மறுபிறப்பில் பாறு கண் உண்டாகும்.

பிறர் பேசும் ரகசியத்தை உற்றுக் கேட்பவன் மறு பிறப்பில் செவிடனாகப் பிறப்பான்.

நண்டின் பத்துக்கால்களை முறித்துச் சமைத்துத் தின்றவன் மறுபிறப்பில் பத்து விரல்களும் அழுகத் தொழுநோயினால் துன்புறுவான்.

சதா புறங்கூறுகின்றவன் மறுபிறப்பில் ஊமையாய்ப் பிறப்பான்.

ஏழைகளை ஓங்கியடித்தவன் மறுபிறப்பில் கையொடிந்து முடவனாவான்.

பிறருடைய வாழ்வைக் கண்டு மனம் புழுங்குகின்றவன், மறு பிறப்பில் குன்ம நோயினால் வேதனைப்படுவான்.

ஞானிகளைப் பழித்தவன் மறுபிறப்பில் பித்தனாகப் பிறப்பான்.

இது வாரியார் சுவாமிகளின் வாக்கு.

சண்டையின் போது சத்தியம் அடிபட்டுப்போகிறது.

# சந்நிதி ஆச்சிரமப் பேரவையும்
## ஞானச்சுடரும் வாழ்க

தொண்டைமா னாற்றங்கரை
தோன்றுசந் நிதிக்கோயில்
துலங்கியருள் முருகவேளே
தொழுதன்று கதிர்காமர்
திருவிளக் கேற்றியே
தொண்டராய்ப் பூசைசெய்

அண்டரும் போற்றுநின்
னருள்வார்த்தைக் கேற்பவே
அன்னம்பய றவல்படைத்தே
அரியவினை நீர்கொண்டு
அவிசொரிந் தர்ச்சித்து
அன்னியன் பார்க்களித்தார்

பல்லாண்ட திலை போயின்றும்
அப்பணியை மேற்கொண்டுன்
பக்தியொடு பலர்செய்திடும்
பாங்காகச் சந்நிதியான்
ஆச்சிரமப் பேரவையோர்
பயபக்தி யோடுவரைவார்

தல்லடையிலம் பொளிக்குறான்
தாள்மலர் பணிந்தன்ன
தானப்பணி செய்தலோடு
தனிஞானச் சுடரெனும்
தனித்திங்கள் வெளியீடும்
தாம்விட்டார் நீகாக்கவே

★ தன்னடக்கம் வலிமை, நல்ல நினைப்பே ஆண்மை. ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தாவுன் பொன்னடியைக்
கருதாத மும்மலக்
கள்வராம் அசுரர்படை
கவின்கொள் திருக் கரமேந்தும்
கதிர்ஞால வேலினைக்
கடிதேவி யவரையழித்தாய்

அந்தவகை யுளங்கொண்டவை
அனைத்தினையு மகற்றவே
ஆச்சிரமப் பணியவையினோர்
அறிஞர்தரும் கட்டுரைகள்
அவிகள்வாழ்த் துரையெலாம்
அச்சேற்றி ஞானச்சுடராய்

சிந்தையுற யாவரும்
பயன்பெறத் திங்கள்தோறும்
திகழ வீ ராண்டுமலரச்
செய்து மூ வாண்டுமுதல்
சிற்றடி பெருக்குநாள்
சேர்ந்தோரை யுவக்கவைத்தே

பத்தமுறப் பாராட்ட
அப்பண்பை யடியேனும்
பாமாலை யாய்த்தொடுத்தே
பாடியே கூட்டுடனவ்
அவையினையும் வாழ்த்தினேன்
பல்லாண்டு வளர்கவென்றே.

ஆக்கம்:
புலவர் வை. க. சிற்றம்பலம்

வெற்றியோ தோல்வியோ நீ நல்ல முறையில் செயலாற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானுடத்தை மேன்மைப்படுத்தும் மாண்புமிகு கோட்பாடுகள்

( மகாபாரதத்திலிருந்து )

# திரௌபதி சுயம்வரம்

திரௌபதியின் சுயம்வரத்தின் பொருட்டு நகரெங்கும் அலங்கரிக்கப்பட்டது. துருபத மன்னன் சுயம்வரத்துக்கென அழகிய மண்டபம் ஒன்றை அழகுற நிர்மாணித்தான். அம் மண்டபத்திலே மன்னர்கள், முனிவர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் அவரவர் தகுதிக்கேற்ப அமர்வதற்குரிய நல்லிருக்கைகள் அமைக்கப்பட்டிருந்தன. மண்டபத்தில் மையப் பகுதியில் உயர்ந்த மேடையின் மீது ஓர் வில் இருந்தது. மேலே விதானத்தில் சுழலும் சக்கரம் ஒன்றும் அதன் மேலே அடிக்கப்பட வேண்டிய இலக்கு ஒன்றும் வைக்கப்பட்டிருந்தது. மண்டபம் மிகவும் அழகுற அலங்கரிக்கப்பட்டு இருந்தது.

சுயம்வர நன்னாளும் வந்தது. திரௌபதியைச் சுமங்கலிப் பெண்கள் புனித தீர்த்தங்களினால் நன்னீராட்டி, அழகுக்கு அழகு செய்வது போன்று, நன்கு அலங்கரித்துக் கையில் மலர்மாலை ஒன்றையும் கொடுத்தனர். திரௌபதியின் அன்னை அவளுக்கு மங்கலத் திலகமிட்டு ஆசிர்வதித்தாள்.

மண்டபத்திலே பல தேசத்து மன்னர்களும், முனிவர்களும், பெரியோர்களும், மக்களும் வந்து கூடினர். எங்கும் மகிழ்ச்சி நிலவியது. பலவிதமான இன்னிசைகள் எங்கும் ஒலித்தன. மக்கள் கூட்டத்துடன் அந்தணர் கூட்டத்தின் நடுவில் பாண்டவர்கள் அந்தணக் கோலத்தில் வீற்றிருந்தனர். மன்னர்கள் வரிசையில், கண்ணன், பலராமன் முதலானோரும், துரியோதனன், விகர்ணன், துச்சாதனன், கர்ணன் ஆகியோரும் வீற்றிருந்தனர். அத்துடன், பெருமளவில் பொதுமக்களும் கூடி மண்டபம் நிறைந்திருந்தது. அந்தணப் பெரியோர்கள், ஹோமம் செய்து, யாக கர்மங்களை மேற்கொண்டனர். மங்களமான மறை மொழிகளை ஓதி யாகாக்கினியை வளர்த்தனர். இவ் வேளையில் நல்ல முகூர்த்த வேளை அண்மித்தது.

---

★ உன் உள்ளம் எப்படியோ அப்படியே உலகம். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துருபத மன்னனின் ஆணைப்படி திரௌபதி தோழியர் புடைசூழச் சுயம்வர மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டாள். மங்கள வாத்தியங்கள் ஓய்ந்தன. அமைதி குடிகொண்ட வேளையில் திரௌபதியின், தமையனாகிய திட்டத்துய்மன் மண்டபத்தின் நடுவிலே அமைந்த மேடையில் ஏறிச் சபையினரை நோக்கி "மன்னர்களே! இங்கே ஒரு வில் வைக்கப்பட்டுள்ளது. இவ்வில்லை நாணேற்றிச் சுழலும் சக்கரத்தின் வழியாக அம்பைச் செலுத்தி அதன் மேல் உள்ள இலக்கை யார் அடிக்கிறார்களோ அவர்களுக்கு, என் தங்கை மாலையிடுவாள். இதுவே சுயம்வர விதியாகும்" என்றுகூறித் தன் இருக்கையில் அமர்ந்தான்.

வில்லை நாணேற்றி இலக்கை அடிக்க மன்னர்கள் ஒவ்வொருவராக எழுந்து முயன்றனர். முதலில் சேதி நாட்டு மன்னன் சிசுபாலன், எழுந்து வில்லை நெருங்கி நாணேற்ற முற்படுகையில் வில்லின் நாண் சிறிது இடைவெளி இருக்கும் போது முடியாது வில்லால் அடிபட்டான். இவ்வாறே சராசந்தன், துரியோதனன், கர்ணன் முதலானோரும், வில்லின் நாணை ஏற்ற முயன்ற சமயம் வில்லால் அடிபட்டுத் திரும்பினர். இவ்வாறு பெரும் வீரர்களானவர்கள் முயன்றும் தோல்வியடைந்ததனைக் கண்ணுற்ற மற்றைய மன்னர்கள் அவமானத்துக்கு அஞ்சி அமைதியாய் இருந்தனர். மன்னர்கள் செயல் ஓய்ந்த நிலையில், அந்தணர் நடுவேயிருந்த அர்ச்சுனன் எழுந்து வில்லை நோக்கிச் செல்லலானான்.

அந்தணக் கோலத்தில் வருவது அர்ச்சுனனே என்பதனைக் கண்ணன் உணர்ந்து, மகிழ்வுடன் அமர்ந்திருந்தான். தம்மிடையே இருந்து ஒரு இளைஞன் எழுவதைக் கண்ட அந்தணர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்து அர்ச்சுனனை ஊக்கப்படுத்தினர். சிலர் இதனைப் பார்த்து நகைக்கவும் செய்தனர். மன்னர்களால் செய்ய முடியாத இவ்வரிய செயலை அந்தணராகிய இளைஞன் செய்வானோ? என்று சிலர் சந்தேகப்பட்டனர். யோசித்துச் செயற்படாமல் இவன் செயலில் இறங்குகிறானே. இதனால் அந்தண குலத்தவர்களாகிய நாம் அவமானப்பட வேண்டிவருமே என்று சிலர் கவலைப்பட்டனர். அர்ச்சுனனின் தோற்றத்தைக் கவனித்த சிலர் இவன் வெற்றிபெற வாய்ப்புண்டு. அந்தணராகிய எமக்குத் தவபலமும் உண்டு. எனவே இவன் வெற்றி பெறுவான் என்று மகிழ்ந்தனர்.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் மதயானையை ஒத்த கம்பீர நடையுடன் சென்று, வில்லிருக்கும் இடத்தை அடைந்து, இவ்வில்லை அந்தணர்கள் நாண் ஏற்றி இலக்கை அடிக்க உரிமை உண்டா, என்று வினாவினான். அப்போது திட்டத்துய்மன் "அரசர், அந்தணர், வணிகர், வேளாளர், ஆகிய குலத்தவர் யாரும் வில்லின் நாண்

தொடர்ந்து செய்யப்படாத முயற்சி தோல்வியையே தரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றலாம். அவ் விழாவை என் தங்கை மணம் முடிப்பதில் எந்தத் தடையும் இல்லை" என்று கூறினான்.

இவ்வுரைகளைச் செவிமடுத்த அர்ச்சுனன், உற்சாகமடைந்தவனாய், மிகவும் பயபக்தியுடன் வில்லை வலம் வந்து வணங்கிக் கண்ணனை மனதார நினைத்துத் தியானித்து, பக்தி சிரத்தையுடன் வில்லைக் கையில் எடுத்து ஒரு நொடிப் பொழுதில் நாணை ஏற்றி ஐந்து பாணங்களைத் தொடுத்துச் சுழலும் சக்கரத்தினூடு செலுத்தி அடிக்க வேண்டிய இலக்கை அடித்து வீழ்த்தினான். சபையிலே பெரும் மகிழ்ச்சிக் கரகோஷம் எழுந்து வானை நிறைத்தது. மங்கல வாத்தியங்கள் முழங்கின. அந்தணர் பூமாரி பெரும் ஆரவாரஞ் செய்து மகிழ்ந்தனர். இவ்வேளையில் சபையில் தந்தையின் அருகில் வீற்றிருந்த திரௌபதி மிக்க மகிழ்ச்சி அடைந்தவளாய்க், கையில் இருந்த மாலையை அர்ச்சுனனுக்குச் சூட்டினாள். பெரியோர்களும் அந்தணரும் மங்கல மொழிகளைக் கூறி அவர்களை ஆசிர்வதித்தனர்.

அந்தணர் ஒருவன் வெற்றி சூடித் திரௌபதியை மணந்தமையைக் கண்ட அரசர்கள் பலர் அவமானம் தாங்காது, அதனை வெளிப்படுத்த முடியாது துருபத மன்னன் மீது கோபம் கொண்டனர். தங்களை மன்னன் அவமதித்ததாகக் கூறி அவனுடன் போரிட முனைந்தனர். அப்போது கலகம் கண்ட மன்னன் அந்தணர்களைச் சரணடைந்து, நல் முறைகளை எடுத்துக்கூறி யுத்தத்தைத் தவிர்க்குமாறு வேண்டினான். ஆனால் அர்ச்சுனனும் பீமனும் மன்னர்களை எதிர்கொள்ளச் சித்தமாயினர். பீமன் பெரும் மரமொன்றை வேருடன் பிடுங்கி எடுத்து யுத்தம் செய்ய முனைந்தான். அர்ச்சுனன் தான் நாண் ஏற்றிய வில்லை எடுத்துச் சமர் புரிய ஆயத்தமானான். அந்தணர் பலரும் அவர்களைத் தொடர்ந்து போருக்கு ஆயத்தமாயினர். அர்ச்சுனனும் பீமனும் அவர்களைத் தடுத்து நிறுத்தி தாம் போர் புரியலாயினர். இவர்களுடன் எதிர் கொள்ள முடியாத மன்னர்கள் பெரும் ஆபத்துக்குள்ளாகினர். இவ்வேளையில் கண்ணன் போரை விலக்கி, மன்னர்களை நோக்கி "அரசர் பெருமக்களே! சுயம்வரத்தின்படியே திரௌபதி, வெற்றியடைந்தவனுக்கு மாலை சூட்டியுள்ளாள். இதிலே ஏன் நீங்கள் மனத்தாங்கல் கொண்டு வீண்சண்டையில் ஈடுபடுகிறீர்கள். தயவு செய்து யுத்தத்தை இத்துடன் முடித்துக் கொள்ளுங்கள்" என்று வேண்டிக்கொள்ள யுத்தம் கைவிடப்பட்டது.

மகிழ்வு கொண்ட அந்தணர்கள் அர்ச்சுனனைச் சூழ்ந்து அவனையும் திரௌபதியையும் வாழ்த்தி நின்றனர். இவ்வாறு பாண்டவர்கள் திரௌபதியையும் அழைத்துக்கொண்டு தாம் வசித்த

அமைதியான மனம் படைத்தவன் அடையும் பெரும் பாக்கியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லம் திரும்பியவர், தாயை அணுகி வணங்கி நின்று "அம்மா இன்று நாங்கள் சிறந்த கனி ஒன்று கிடைக்கப்பெற்றோம்" என்று கூறி நின்றனர். "அதனை ஐவரும் சேர்ந்து புசியுங்கள்" என்று குந்திதேவி கூறலானாள். கனி என்று குறித்தது பெண் என்று தெரிய வந்ததும் குந்திதேவி மிகவும் கவலை கொண்டாள், யுதிஷ்டிரனை நோக்கி "மைந்தா யான் இப்படிக் கூறிவிட்டேன் யாது செய்வது?" என்று வினாவினாள், அப்போது யுதிஷ்டிரன் சிந்தனை வயப்பட்டவனாய் மௌனமாக இருந்தான். வியாச மகரிஷி திரிகால தரிசனத்துடன் கூறியது யுதிஷ்டிரன் நினைவில் தோன்றலாயிற்று. சற்றுப் பொறுத்திருந்து சிந்தனை செய்து அர்ச்சுனனை நோக்கி 'அர்ச்சுனா! நீதான் சுயம்வரத்தில் வெற்றி கொண்டு திரௌபதியை அழைத்து வரக் காரணமாகவிருந்தவன். எனவே நீயே அவளை வேதவிதிப்படி மணந்து கொள்வாயாக" என்றான். அப்போது அர்ச்சுனன் "அண்ணா நீங்கள் சொல்வது தர்மமன்று. மூத்த புதல்வராய் தாங்கள் இருக்க யான் மணம் கொள்வது அறமன்று" என்று மறுத்துரைத்தான். அர்ச்சுனன் இவ்வாறு மறுத்துக் கூறியதும், மேலும் யோசனையில் ஆழ்ந்த யுதிஷ்டிரன் வியாசர் கூறியவற்றையும் நினைவு கூர்ந்து "நம் ஐவருக்கும் திரௌபதி மனைவியாகட்டும்" என்று உரைத்தான்.

இவ்விடத்திலே நாம் ஒரு சந்தர்ப்பத்தைத் தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும். துரியோதனன், கர்ணன், என்போரும் அர்ச்சுனனைப் போன்று சிறந்த வில்லாளிகள். அரசகுமாரர்கள் எவரும் வீரத்தில் குறைந்தவர்களல்லர். இவ்வாறிருக்கையில் அர்ச்சுனன் மட்டும் வில்லை வளைத்து நாணேற்ற முடிந்தது எவ்வாறு? அர்ச்சுனனிடம் இருந்த பணிவு தெய்வ பக்தி என்பன அவனை வெற்றி கொள்ள வைத்தது. "தெய்வ பலம்" என்பது ஒவ்வொருவருக்கும் இருத்தல் இன்றியமையாதது. பக்தி செய்து செய்து இறைவனை நாம் சிக்கெனப் பிடித்துக் கொண்டால் எம்மால் ஆகாதது ஒன்றும் இல்லை. எமக்குக் கைகூடாதது எதுவுமில்லை.

ஏனெனில், பரம்பொருளின் திருவருட் கடாட்சத்தில் தங்கியிருக்கும் நாம் தெய்வத்தைத் துணை கொள்ளாது மறந்து, வழி தவறிச் செல்வோமாயின் வாழ்வில் வளம் எப்படிச் சேரும், திருவருட் சம்மதத்துடன் நாம் காரியங்களைச் செய்வோமாயின், வெற்றி உறுதியானது. இன்றைய கால சூழலில் எம்மை நல்லாற்றுப் படுத்தி நடப்பன நல்லனவாக அமைய இறையருள் ஒன்றே தனித்துணை, பெருந்துணை என்பதை நாம் உணர வேண்டும். இதுவே இம்மாத சிந்தனையாகக் கொண்டு இறைபரம் பொருளை இறுகப் பிடித்து இன்பமடைய வேண்டுகிறேன். (தொடரும் ...)

சிவத்திரு வ. குமாரசாமி ஐயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உய்விக்கும் உன்பணியால்

# உலகமெல்லாம் மனம் ஆறும்

வண்டாடும் வெண்டாமரை வேலன் கழல்பேணி
தொண்டாடும் தொண்டைமான் ஆற்றுச் சந்நிதியில்
மன்றாடும் மக்களுக்கு மலமகல இருள்விலக
கொண்டாடும் ஒருமலராம் பெருஞானச் சுடராமே.

கைவேலன் சந்நிதியான் கருணையாம் திரு ஆச்சிரம
சைவத்தின் கலைதன்னைச் சளைக்காமல் வளர்த்திட்ட
தெய்வத்தின் பண்பாட்டுப் பேரவையே! பெருநிதியே!
உய்விக்கும் உன்பணியால் உலகமெல்லாம் மனம்ஆறும்.

மாதமொரு நிலவாய் மலர்ந்துவரும் அருட்சுடரே!
போதனைகள் பலதந்து வேதனைகள் மாற்றுகின்றாய்
ஆதரவு பலநல்கி அறிஞர்க்கு அருள்ஞானத்
தூதனாய்ப் பலகாலம் தொடர்ந்துநீ வாழியவே.

இரண்டாண்டு கடந்துஞானத் தொண்டாற்றும் பேரவையே
இரண்டாயிரம் ஆண்டுவிழும் இனிதாக வாழ்கின்றாய்
கண்டால் உன் சந்நிதியில் உடல்நோயும் உடன்நீங்கும்
நின்றாலும் இருந்தாலும் அருள்ஞானச் சுடர்பரவும்.

குன்றாத ஆச்சிரமே! குறையாத பேரொளியே!
மூன்றாகும் ஆண்டினிலே முதிர்ந்துவரும் ஞானமதியே!
வேண்டாத வினைகளெல்லாம் விரைந்தோடும் சந்நிதியில்
தூண்டாத மணிபோல்நீ தெளிவாக ஒளிர்க.

வாரமொரு வெள்ளி வகையான சொற்பொழிவு
பாரம்பெற நெஞ்சில் சுவையான அன்னதானம்
நேரம் மறந்திருக்க நேர்த்தியான இசைஞானம்
ஆரம்பம் முதலாக அறிவூட்டும் பேரவையே!

ஆக்கம்
சிவஸ்ரீ பாலசர்வேஸ்வரக் குருக்கள்
B. A. (Hons)

பரம்பொருளைச் சிந்தித்தால் உள்ளத்தில் ஒளி பிறக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குறளமுதம்

பொதுசன நூலகம்

## குறளும் - வாழ்க்கையும்

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

வள்ளுவர் அகரத்தையே முதன்மையாக எடுத்துக்காட்டி இருக்கிறார். அதன் பொருள் என்ன? எல்லா எழுத்துக்கும் முதன்மையானது அகர எழுத்தென்றால், தமிழ் மொழி மட்டுமல்ல; தெலுங்கு,கன்னடம், மலையாளம், ஆங்கிலம், வடநாட்டு மொழிகள் பல உலகின் எல்லா மொழிகளுக்கும் அகரமே முதலாவது என்பதற்கு ஐயப்பாடு இருக்கலாம்; எல்லா மொழிகளுக்கும் அகரமே முதன்மையானதென்றால் ஆங்கிலத்திற்கும் தமிழுக்கும் அகரம் ஒன்றாய் அமைந்திருக்கிறதா என்று நான் கூறுவது என்னவெனில், வரி வடிவத்திலே ஒற்றுமை காணுவது சந்தேகந்தான். ஆனால், ஒலி வடிவத்திலே எல்லா மொழிகளுக்கும் அகரமே முதன்மையாய் இருப்பதுடன், எவ்விதச் சிறு வேறுபாடுமின்றி ஒன்றாயிருக்கிறது. இது எப்படித் தெரிய வருகிறது என்றால், மொழிநூல் ஆராய்ச்சி நாளுக்கு நாள் பெருகி வருகிறது. ரஷ்யாவில் கூட சமீபத்தில் ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகிறது. இவ்வித ஆராய்ச்சிகளில் அகரத்தைப்பற்றியும் ஒருமித்த முடிபுக்கு வந்துள்ளனர். எனவே, உலகத்திலுள்ள எல்லா எழுத்துக்களுக்கும் அகர நாதம் ஒன்றாயிருக்கிறது. இதை அடிப்படையாகக் கொண்டுதான் நமது வள்ளுவர் அகரத்தை முதன்மையாகக் குறிப்பிட்டார். ஆனால் அதன் விளக்கம் என்ன? அதைப் பற்றிப் பல வாதங்கள் ஏற்படும்.

அநாதியைப் பற்றிப் பெரியோர் யாரும் கூற முடியாது. ஆனாலதைக் கண்டது போலக் கூறப் பெரியோர்கள் முற்படமாட்டார்கள். எனவே, குறள் ஆசிரியரும் சொல்ல முடியாத ஒன்றைச் சொல்லாமல் விட்டு, 'ஆதி பகவன்' என்று கூறியிருக்கிறார். இது பற்றியும் பல போராட்டங்கள் இன்றும் நடைபெற்று வருகின்றன. இவை வேண்டற்பாலனவா எனின், ஆம்; இத்தகைய போராட்டங்கள் வேண்டும் என்றே கூறுவேன். அறிவுப் போராட்டங்கள் வேண்டா என்று யாரும் கூற முடியாது. கைப்போர்

தேவையற்ற விவாதங்கள் செய்தல் தீமை தரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் கூடாது. கருத்துவேற்றுமை வரவேற்கப்பட வேண்டியதாகும். அப்போதுதான் நாடு முன்னேறும். ஆனால், கைகலப்பு மட்டும் வேண்டாம். இச்சமயம் உங்கள் நினைவுக்கு ஒன்றைக் கூற விரும்புகிறேன். நான் பழைய ஏடுகளை நன்கு ஆராய்ச்சி செய்தபோது வள்ளுவர் இரண்டாவது குறளாக

"இருள்சேர் இருவினையும்
சேரா; இறைவன்
பொருள்சேர் புகழ் புரிந்தார்
மாட்டு"

என்பதையே குறிப்பிட்டிருக்கிறார். இது குறளின் முதல் அதிகாரத்தில் இரண்டாவது செய்யுளாகக் காணப்படுகிறது. இருளைப் பற்றி விவாதம் பல காலமாக நடைபெற்று வருகிறது. இருள் பொருளா, அல்லவா என்று ஆராய்ச்சி நடந்துள்ளது. வெளிச்சம் பொருளா என்றால் அது பொருள் என்று முடிவு கூறப்பட்டுள்ளது. இது தத்துவ சாஸ்திரிகள் சண்டை. ஏன்? பெரிய பாஷ்யகர்த்தர்களுக்குள்ளும் சண்டை. இதைப்பற்றி வள்ளுவர் என்ன கூறுகிறார்? விஞ்ஞானிகள் கண்டதையே கூறுவர்; காணாததைக் கூறமாட்டார்கள். அத்தன்மையிலேயே இதற்கும் பொருளைத் தேடவேண்டும். விஞ்ஞானிகள் நுட்பத்தை எளிமையாகச் சொல்பவர். அதை ஏற்றுக் கொள்ள வேண்டும். விஞ்ஞானிகள் இருளைப்பற்றி என்ன கூறுகின்றனர்? பொருள் என்றால் அதற்குச் செயல் இருக்க வேண்டுமென்பதேயாகும். இருளிற் செயலிருக்கிறதா? ஜெர்மனியிலே 316 அறிஞர்கள் ஆராய்ச்சி செய்து இருளுக்கும் அறிவு இருக்கிறது என்று முடிவுக்கு வந்துள்ளனர். இப்போது ஆகாயத்திற்கும் செயல் இருக்கிறது என்று காட்டப்பட்டுள்ளது. அதே போல இருளுக்கும் செயல் நிகழ்ச்சி இருக்கிறது. இப்படிப்பட்ட ஆராய்ச்சியின் மூலமே குறளைப் பார்க்கவேண்டும். இருளுக்கும் பொருள் உண்டு என்று கூறியுள்ளார் வள்ளுவரும். அப்பொருள் எது? இயற்கைதான் அப்பொருள்.

திருக்குறளுக்குப் புகழை அளிப்பது காமத்துப் பாலேயாகும். அதற்கு அறத்துப்பாலும் பொருட்பாலும் அரண்களாக அமைந்துள்ளன. திருவள்ளுவர் காமத்துப் பாலிற் காதல் மணத்தை வலியுறுத்துகின்றார். அவர் கூறிய காதல் மணம் மக்கள் வாழ்க்கையிற் பரவவில்லை என்றால் வெட்கக் கேடல்லவா? காரணம் என்ன? அவருடைய கருத்துக்கள் நாட்டிற் பரவவில்லை. அவருடைய கொள்கைகள் மக்கள் வாழ்க்கையில் அமையவில்லை என்று தான் கூற வேண்டும்.

வள்ளுவர் நமக்கு, நாட்டுக்கு, ஏன் உலகிற்கே குறளை தந்து, இரண்டாயிரம், மூவாயிரம் ஆண்டுகள் கழிந்தும், அவரது உயரிய கொள்கையான காதல் மணம் பரவாததற்கு அக்காலத்து அரசாங்கம் முதல் இக்காலத்து அரசாங்கம் ஈறாகக் காரணமெனின், அது

தன்னை மதிப்பவன் பிறரையும் மதிப்பான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகையாகாது. காதல் மணத்தைப் பரவவிடாமல், சாதி, சமயம், நாட்டுச் சட்டம் நிறத்தடை, இன்னும் பிற தடுக்கின்றன, குறுக்கிடுகின்றன. இந்துக்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும், இஸ்லாமியர்களுக்கும் ஒருவரோடு ஒருவர் மணம் செய்து கொள்ள முடியவில்லை? இதற்குச் சாதி, சமய சம்பிரதாயங்களும், அரசியலாரின் சட்டங்களும் உடனே தடை செய்கின்றன.

இருமணத்தைப் பற்றி ஏராளமான சட்டங்கள் உண்டு. இவை நீங்கினால்தான் காதல் மணம் வளரும். காதல் மணம், வளர்ச்சி பெறின் இன்றைய உலகின் அமைதியும், அன்பும், அறிவுடைமையும் கால் கொள்ளும். திருக்குறள் தமிழ்மொழியிலே யாக்கப்பெற்றதாயினும், அது உலகிற்கே பொதுவான பேறு நூலாகும். காதல் மணம் இன்னாருக்குத்தான் உரியது என்று கூற முடியுமா? ரஷ்ய மாதை நம் நாட்டின் ஒருவன் மணம் செய்துகொள்ள ஏன் தடை இருக்க வேண்டும்? அதேபோல் ஒவ்வொரு நாட்டிலும் மற்ற மக்களோடு மணம் செய்துகொள்ள ஏன் அரசாங்கமும் மறுப்புக் குறுக்கிட வேண்டும்? நாகரிகத்திற் சிறந்த தென்று கருதப்படும் இங்கிலாந்து நாடுகூட இந்த அறிவு பெறவில்லை. எப்படி எனின் நம் எட்வர்டு மன்னருக்கே மண விஷயத்தில் தடை விதித்தது அந்த நாட்டுச் சட்டம். அமெரிக்க மாதை அவர் விரும்பி மணக்கச் சட்டம் இடம் தரவில்லையாம்.

இது என்ன விந்தை! மன்னருக்கே உரிமை - சுதந்திரம் இல்லை என்றால், மக்கள் கதியைச் சொல்லவும் வேண்டுமோ? ஏன்? மன்னரின் கதிதான் என்ன ஆயிற்று? காதல் மணத்தை மேற்கொண்டதன் காரணமாக அவர் அரியணையிலிருந்து தூரத்தப்பட்டார். உண்மையான காதலைப் பரவச் செய்வோமானால், 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற கொள்கை மலரும், நாடும் வளம் பெறும். எனவே இன்றுள்ள இரு மணச் சட்டங்களும், சாதி சமயக் கோட்பாடுகளும் ஒழிந்து காதல் மணம் பரவ விடவேண்டும். இன்றைய கால நிலையை அறியாதார் மலிந்த உலகிலே சிறந்தோராவார். இலங்கையிலிருந்து போக 30 நாட்கள் ஆகும் என்ற நிலைமாறி, இன்று 30, 40 மணித்தியாலத்திற் செல்கிறோம். இன்னும் விரைந்து 8 மணி நேரத்திற் செல்லும் நிலை எய்தி இருக்கின்றோம். விஞ்ஞானம் இப்படி விரைந்து வளர்ச்சி பெற்று வருகின்றது. மக்கள் ஒரே கூட்டமாகத் திகழ வேண்டும். அதற்கு இன்றியமையாதது காதல் மணமேயாகும். இதைத்தான் திருவள்ளுவர் திருக்குறளில் வலியுறுத்துகின்றார்.

மக்கள் சமுதாயத்திலே புதியதோர் அறிவுணர்ச்சியை - மாறுதலை உண்டாக்கக் காமத்துப்பால் எப்படி அரண் செய்கிறதோ, அதேபோன்று பொருட்பாலும் ஆக்கமளிக்கின்றது. திருவள்ளுவர் கூறிய கல்வி முறை உலகிற்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவானதாகும். உழவுத் தொழிலின் நிலை யாது? உழவு மட்டுமன்று. பொதுவாகத் தொழில் உலகமே எவ்வாறுள்ளது என்பதுபற்றிக் கூறவும் வேண்டுமா? அவை பற்றி இங்கு விரித்துக்கூற முயலேன். அரசியலைப் பற்றியும் இறை மாட்சி என்னும் அதிகாரத்திலே வள்ளுவர், இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே விளக்கம் தந்துள்ளார். அதை மக்களும், இன்றைய உலகமும் இனியாகிலும் அறிந்து நடப்பார்களானால், நாட்டின் நிலை எந்துணையோ மாறுதல் பெறும். அன்பும் அமைதியும் நிலைபெறும், சகோதர நேயம் வளரும். நாடுகள், உலகம் எல்லாம் மக்கள் கூட்டம் சேர்ந்து வாழ இயலும்.

வள்ளுவர் இல்லறத்தில் வாழ்ந்தவரா, துறவியாயிருந்தவரா என்பதே பெரியதருக்க வாதத்திற்குரிய ஒன்று. ஆனால், அவர் இல்லறத்திலேயே வாழ்ந்தார். வாழ்ந்தது மட்டுமல்ல. இல்லறத்தைச் சிறப்பித்தும் கூறியுள்ளார். 'குழலினிது, யாழினிது' என்னும் திருக்குறளானது அவர்தம் இல்லறத்தைப்பற்றிய கருத்தை நன்கு புலப்படுத்தும். அவர் ஆண், பெண் கூட்டுறவே வாழ்க்கையென்று வலியுறுத்திக் கூறுகின்றார். ஆனால், பிற்காலத்துக் கொள்கைகள் இதற்கு மாறுபட்டு உட்புகுந்து விட்டன. பிற நாட்டுக் கொள்கைகள் இங்கு வளர்ந்தன. நமது பண்டை மரபும், முன்னோர் வழியும் ஆண், பெண் சேர்க்கையையே வலியுறுத்துகின்றன. ஆனால், இன்று துறவறம் பற்றிப் பிரமாதமாகப் பேசப்படுகின்றது. மண், பெண், பொன் ஆகியவற்றை வெறுப்பதே துறவு என்றும், இல்லறம் என்பது அநித்தியம் என்றும் கூறப்படுகின்றது. இவையை ஆராயப் புகுவோமேயானால் வளரும். எனவே, இயற்கையாக அறுவிலேயும் ஆணும் பெண்ணும் இருப்பதாக வள்ளுவர் கூறி இருக்கிறார். மரம், செடி, பறவை, விலங்கு எல்லாம் இப்படி இருக்க, ஆறறிவு படைத்த மனித சமுதாயத்திலே இக் கூற்று எப்படி வந்தது - புகுந்தது. இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே இதை வள்ளுவர் எதிர்த்திருக்கின்றார். வாழ்க்கை வாழ்வதற்கேயன்றி, துறப்பதற்கல்ல. இடைப்பட்ட சில கொள்கைகள் இதற்கு மாறாகப் புகுந்துவிட்டன.

இப்படித் திருவள்ளுவர் தம் மக்களுக்காக மட்டுமன்றி, உலகிற்கே உரிய நீதி நெறியை இன்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்பே எடுத்துக் கூறியிருக்கிறார். திருவள்ளுவர் தமிழிலே நூல் இயற்றி இருந்தாலும், அவரது குறளில் தமிழைப்பற்றியே கூறாது விடுத்தார். ஏனெனில் குறள் எல்லோருக்கும் உரியதாகுமென்ற காரணத்தினாலேயே. தமிழருக்கு மட்டுமே என்று கூறியிருப்பாரானால் குறள் அப்போதே மறைந்து போயிருக்கும். எனவே, குறளை, வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு பார்க்கவேண்டும். குறிப்பாகத் தாய்மார்கள் உள்ளத்தில்

சிரிப்பில் அடக்கமும் சிந்தனையில் தெளிவும் தேவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்குறள் நன்கு பயிலப்படின், பெண்கள் உலகிற்கு நீதி கூறும் நூல் ஒன்றுண்டென்றால் அது குறளேயாகும். நம் நாட்டுப் பெண்களுக்கு மட்டுமல்ல, உலகிலுள்ள பெண்கள் சமுதாயத்திற்கே என்று கூறுவேன். குறளைப் படித்துப் பெண்கள் வள்ளுவர் போன்ற மக்களை ஈன்றெடுப்பார்களாக!

தமிழ்ப் பெரியார்
திரு. வி. க.

## பக்குவம்

செல்லப்பா சுவாமிகள் தமது சீடர்களுடன் செல்லும் பொழுது அவர்களை நன்கு விளங்கி அவர்கள் மீது அன்பு செலுத்துகின்ற அடியார்கள் வழங்குகின்ற அரிசி, மரக்கறி போன்ற பொருட்களை பெற்றுக் கொள்வது வழக்கம். ஒரு நாள் செல்லப்பா சுவாமிகளும், அவரது சீடர்களும் அவ்வாறு பெற்றுச் சென்ற அரிசி, மரக்கறி என்பவற்றை ஒரு மரத்தின் கீழ் வைத்து நல்ல முறையில் சமையல் செய்தனர். சமையல் முடிவடைந்து கொண்டிருந்தது. சமையல் வாசனை ஒரு புறமும் களைப்பு இன்னொரு புறமுமாக சேர்ந்து சீடர்களது பசியைத் தூண்டிக் கொண்டிருந்தது. எல்லோரும் எல்லாவற்றையும் மறந்து எப்போ சாப்பிடுவோம் என அங்கலாய்த்துக் கொண்டிருந்தனர்.

செல்லப்பா சுவாமிகள் திடீரென ஒரு கொட்டனை எடுத்து அடுப்பில் இருந்த சோற்றுப்பானை மற்றும் கறிச்சட்டி என்பவற்றை அடித்து நொருக்கினார். சுவாமிகள் ஏன் இவ்வாறு செய்கின்றார் என திகைத்து தடுமாறிய சீடர்கள் ஒருவாறு தம்மை சுதாகரித்துக்கொண்டனர். சாதாரண உணர்விற்கு தங்களது மனம் எவ்வளவு சஞ்சலப்படுகிறது என்பதை நன்கு புரிந்து கொண்டனர். குருநாதர் தங்களை எவ்வாறு எல்லாம் பக்குவப் படுத்துகின்றார் என்பதையும் தெரிந்து கொண்டனர்.

கந்தசஷ்டிக்கால சிறப்பு நிகழ்வில்
ஆசிரியர் வேதநாதன் அவர்கள்

அகங்காரத்தை விட்டவனுக்குத் துன்பம் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பர் காட்டும் அருள்நெறி

சைவ குரவர்கள் நால்வருள் திருநாவுக்கரசு சுவாமிகள் "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்னும் கோட்பாட்டினைக் கடைப்பிடித்தொன்றுடன் உழவாரத் தொண்டு புரிந்து தாசமார்க்கத்தின் பெருமையை உணர்த்தி அருளியவராவர்.

அப்பர் சுவாமிகளைத் திருநாவுக்கரசர் என அழைப்பர். திருநாவுக்கரசர் என்ற சொற்றொடர் திரு, நாவு, அரசர் என்னும் மூன்று சொற்களாலானது. திரு என்பது அருட்செல்வத்தையும், பொருட்செல்வத்தையும் குறிக்கும். அவற்றுட் பொருட்செல்வம் இம்மை இன்பத்தையும் அருட்செல்வம் பேரின்பத்தையும் அளிக்கும். இவ்வுலகிற் சிற்றின்பத்துக்கு பொருட்செல்வம் உதவுவது போல அருட்செல்வம் பேரின்ப வாழ்வை நல்கி நிற்கும். இரண்டும் மங்கலத்தன்மையவாயினும் அருட்செல்வமே சிறப்புள்ள மங்கலமாகும். இத்தகைய சிறப்புள்ள மங்கலப் பொருட்களுக்கும் செயல்களுக்கும் முன் 'திரு' என்பதை அடைமொழியாக வைப்பது தமிழர் மரபு. இதற்கேற்ப நாவுக்கரசர் என்ற சொல்லின் முன்பும் திரு என்னும் மங்கல அடைமொழி வந்தது.

நா என்பது நாக்காகும். இங்கே அது ஆகுபெயராய் நாக்கிலிருந்து பிறக்கும் சொற்களைக் குறிக்கின்றது. அரசர் என்பது இறைவர் அல்லது தலைவர் என்று பொருள்படும். ஓர் அரசன் குடிகளை நல்வழிப்படுத்தி எல்லா நலன்களையும் அடையச் செய்து தன்னலமின்றிப் பிறர் நலன் பேணி ஆளுகை செய்தல் வேண்டும். எனவே, இப்பூவுலகில் தன்னலம் இன்றிப் பிறர் நலன்பேணி வாழ்ந்து காட்டிய அப்பர் சுவாமிகளுக்குத் திருநாவுக்கரசர் என்னும் பெயர் மிகப்பொருத்தமானதே.

திருநாவுக்கரசர் சிவபெருமானால் ஆட்கொள்ளப் பெற்ற பின் அவருடைய வாக்குகள் எல்லாம் சிவபெருமானுடைய அருள் வழியிற் பிறந்தவையே இயல்பாக உடையன. அவைகள் அருள் வழியன்றி வேறு வழியிற் செல்ல மாட்டா. இக்கருத்தைச் சேக்கிழார் சுவாமிகள் பெரியபுராணத்து திருநாவுக்கரசு சுவாமிகள் புராணத்தில்:

"தூயவெண்ணீறு துதைந்த பொன் மேனியும் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவரும் சிந்தையும் நைந்துருகிப்
பாய்வது போல அன்பு நீர் பொழிகண்ணும் பதிகச் செஞ்சொல்
மேய செவ்வாயும் உடையார் புகுந்தனர் வீதியுள்ளே"

அன்பைவிட வலியசக்தி உலகில் எதுவும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று பாடலிலும் வேறு சில பாடல்களிலும் கூறி அருளினார்.

அப்பர் சுவாமிகள் காட்டும் நெறி தாசமார்க்கமாகையால் தன்னை இழித்து இறைவன் அருள் வேண்டுவதை அவர் தேவாரங்களிற் காண முடிகிறது. அவர் தன்னை அருள் ( அறிவில் ) இலாதேன், கள்ளத்தேன், செடியனேன், நீசனேன், பாவியேன், பித்தனேன், பேதையேன், பேயேன், பொய்கலன், பொறியிலேன், மதியிலேன், வஞ்சனேன், வல்வினையேன், என்றெல்லாம் இழிவு படுத்தி இறைவன் அருளை ஏத்து நின்றார்.

இவ்வாறு தாசமார்க்கத்தில் நின்று இறைவன் அருளை வேண்டிய அப்பர் சுவாமிகள் இறைவனிடம் பின்வரும் வேண்டுகோள்களை விடுக்கின்றார்.

1) அடியேன் இனிப் பிறவாத வாறு அருள் புரிக.
2) பிணி நோய்களை ஒழித் தருள்க
3) இடபம் பொறித்து என்னை ஏற்றுக்கொள்.
4) வழிவழியாளாகும் வண்ணம் எனக்கு அருளுக.
5) ஐவர் என்னைக் கலக்காமற் காத்தருள்க.
6) சிவகதியைத் தந்தருள்க.
7) திருநீறு எனக்குப் பூசு.
8) அஞ்சாதே என ஒரு வாக்கு அளித்தருள்.
9) நான் இறக்கும் போது உனது அஞ்செழுத்தை ஓதும் நினைவைத் தந்தருள்க.
10) உன் திருவடித் தரிசனத்தைத் தந்தருள்க.
11) நான் புழுவாய்ப் பிறந்தாலும் உன்னடி என் மனத்தில் வழுவாதிருக்க வரம் தந்தருள்க.
12) யமன் என்னிடம் வராதிருக்க உனது சூலத்தை என்மேற் பொறித்தருள்க.
13) நாம் சாவும் தினத்தில் அடியேன் " இறைவா நீ காக்குற்றாய் " என்றால் " இதோ இருக்கிறேன் " என வந்து அருள்க.

இத்தகைய அவரது வேண்டுதல்கள் எல்லாம் பிறவிப்பெரும் கடலிலிருந்து மீட்சிபெற வேண்டிய வேண்டுதல்களாகவே அமைகின்றன.

இளம் வயதிலிருந்தே அப்பரின் வாழ்வு சோதனைக் களமாகவே விளங்கி வந்திருக்கின்றது. பாலிய வயதிலேயே பெற்றோரை இழந்தமை, அதனையடுத்துத் தமக்கையின் கணவராக நிச்சயப்படுத்தப் பட்டவர் போரில் மாண்டமை, அதனைத் தொடர்ந்து தமக்கை தற்கொலைக்குத் துணிந்தமை இவையனைத்தும் பாலிய மருள் நீக்கியை விரக்தியுறச் செய்தன. இவ்விரக்தி அவருக்கு இயல்பாகவே நிலையாமைக் கருத்துக்களிற் பற்றினை ஏற்படுத்தியிருக்க வேண்டும். எனவே எப்போதும் இறப்பு வரலாம் இதை இறைவனே உணர்த்துகிறான்.

தானம் என்பது பிரதி பலன் கருதாத கொடை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" பிரியா அருள்செய்யப் பிரமன் சிரங்காட்டிப்
பிச்சைய தேற்றான் பிரமன் தலையோட்டில் " - திருமூலர்

" 'அரிவது' " லெம்பெருமான் பிரமன் தலையோட்டைக், காட்டிப் பிட்சை கேட்கின்றாரெனம் ஏன்? அப்பொழுது நான் மக்கள் பசித்து இடுவார்களாம் எப்படி? உங்களை ஆக்கிய பிரமனுக்கு ஆயுள் முடிந்து விட்டது. பாருங்கள் நீங்கள் நினைத்திருப்பது எங்கே? ஆதலின் இப்பொழுதே அறஞ் செய்து நல்வினையாளராகுமின் எனக் காட்டுகிறார்.

எனவே அப்பர் சுவாமிகள் நமது ஐம்பொறிகள் தெய்வத்துக்குச் செய்ய வேண்டிய கடமைகளை அறிவுறுத்தினார்.

" தலையே நீ வணங்காய் - தலைமாலை தலைக்கணிந்து
தலையாலே பலி தேரும் தலைவனைத் - தலையே நீ வணங்காய். "

எனத் தொடங்கும் திரு அங்கமாலை மூலம் அறிவுறுத்துகிறார். இவ்வாறு இறைவன் பாதத்தை வேண்டிய அப்பர் சுவாமிகள் அடியார் பொருட்டும் பின்வரும் வேண்டுதல்களைச் செய்கிறார்.

இறைவா துன்பந்தரும் பிறவிக்கடலைக் கடக்க வேண்டி, உனது திருவடியைப் பரவும் அடியார்களுக்குத் துன்பம் வராமல் அவர்களைக் காத்தருள்க. உன் தாளே சரணம் என ஏங்கி ஆசை கொள்ளும் அன்பர்கள் மீது இரக்கம் கொள்ளுக. அவர்களுக்கு வரும் நோயை விலக்கியருள்க. துன்பத்தைத் தொலைத்தருளுக. அவர்களை வினை தொடராத வண்ணம் காத்தருள்க திருநீற்றைப் பூசி உன் தாளைப்பரவி வீழ்ந்து வணங்கி நீயே சரண் என்று அழைக்கின்றவரும் அடியார்களுக்கு இரங்கி அருளுக நீயே பிரான் என்று பித்துப் பெருகிப் பிதற்றும் அடியார்களின் பிணிகளைத் தீர்த்தருளுக என்று எல்லா வேண்டுதல்களும் பிறவிப் பிணி தீர்க்கும் மருந்தை வேண்டுவதாகவே அமைகின்றது.

இவ்வாறு இறைவனிடம் வேண்டுதல்களைச் செய்த அப்பர் சுவாமிகள் சமூக மூட நம்பிக்கைகளை ஒழிப்பதிற் போராளியாகவும் செயற்பட்டார்.

எம்மதமும் ஆழ்ந்த தத்துவங்களை உள்ளடக்கத்தில் கொண்டிருப்பினும் தோற்றப் பொலிவுக்காகச் சடங்குகளையும் அனுமதிக்கிறது. ஆயினும் நடைமுறையில் சடங்குகளே முக்கியத்துவம் பெறுகின்றபோது மதமென்பது வெறும் கேலிக்குரியதாகி விடுகின்றது. இத்தகைய வெளிப்பாக்கை அப்பர் கடுமையாகக் கண்டித்துள்ளார்.

" கங்கையாடிலென் காவிரியாடிலென்
கொங்கு தண்குமரித் துறையாடிலென்
பொங்கு மாகடல் ஓத நீராடிலென்
எங்கும் ஈசன் எனாதவர்க் கில்லையே "

சேவை செய்பவனிடம் வேற்றுமை கிடையாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது மாத்திரமல்ல சைவ மதத்தில் புரையோடிப்போயிருந்த சாதிப்பாகுபாட்டை நீக்க வேண்டும் என்பதில் அக்கறை காட்டினார்.

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

"சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து
தரணியொடு வான் ஆளத் தருவரேனும்
மங்குவார் அவர் செல்வம் மதிப்போம் அல்லோம்
மாதேவர்க் கேகாந்தர் அல்லர் ஆகில்
அங்கமெல்லாங் குறைந்தழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பர் ஆகில்
அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே"

என்ற பாடல் இதற்குச் சான்றாக விளங்குகின்றது. இவ்வாறு ஓர் சீர்திருத்தவாதியாக அவர் விளங்கிய அதேநேரம் 'வாழ்வில் தீரமும் உறுதியும் கொண்டவராகவும் விளங்கியுள்ளார்.

'நாமார்க்கும் குடியல்லோம்' என்றும், 'என்றும் நாம் யாவர்க்கும் இடைவோம் அல்லோம்' என்றும் 'ஆடுடுத்துப் பொன் பூண்டு திரிவார் சொல்லும் சொற் கேட்கக் கடவோமோ?' என்றும் நாளைத் தீவினைக்கு நாதரான காலனையேவி விடுத்தாரேனும் கடவமல்லோம் என்றும் 'பாராண்டு பகட்டேறி வருவார் சொல்லும் பணி கேட்கக் கடவோமோ' என்றும் அப்பர் கூறும் வார்த்தைகள் பல்லவர்களை அதிகார வர்க்கத்துக்கு எதிரான துணிகர வார்த்தைகளாம்.

இவ்வாறு வாழ்வில் தீரமும் உறுதியும் கொண்டு சீர்திருத்தவாதியாக விளங்குவதற்குத் தம் நிலையை அப்பர் பல்வேறு இடங்களிலே எடுத்துக் கூறுகிறார்.

நீண்ட காலம் சமணத்தைச் சார்ந்திருந்தமையால் அப்பர் நிலையாமைக் கருத்துக்களை வற்புறுத்தியுள்ள போதும் மனிதப் பிறவியின் சிறப்பை மறந்தாரல்லர். இறைவனது திருவுருவைக் காணும் பாக்கியம் ஒருவருக்குக் கிடைப்பதாயின் மனிதப்பிறவி அவசியமானதே என்பதை இப்பாடல் மூலம் உணர்த்துகிறார்.

"குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியிற் பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற் பாதமும் காணப்பெற்றால்
மனிதப் பிறவியும் வேண்டுவதேயிந்த மாநிலத்தே"

அன்பும் பண்பும் அறிவுபூரியின் அளவுகோல்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு இவ்வுலகினர்க்கு அவர் காட்டும் அருள் நெறி அவரின் அனுபவ முதிர்ச்சியின் வெளிப்பாடேயாகும். உலகத்தில் ஏற்படும் துன்ப துயரங்களுக்காக ஏங்கிக் கொண்டிருக்கும் மக்களை இறைவனுக்கு ஆட்படுத்தி உற்சாகப் படுத்துவதைப் பின்வரும் பாடல் விளக்குகிறது.

"அல்லல் என்செயும் அருவினை என்செயும்
தொல்லை வல்வினைத் தொந்தந்தான் என்செயும்
தில்லை மாநகர்ச் சிற்றம்பல வனார்க்
கெல்லை யில்லதோ ரடிமை பூண்டேனுக்கே"

இவ்வாறு இறைவழி நின்று "இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை" என வாழ்ந்தவையே அப்பரின் அருள்நெறி வலியுறுத்தி நிற்கின்றது.

திரு. ஆ. சிவநாதன்
B. A. (Hons)

எதைச் செய்ய வேண்டும்?

தனிமனித ரீதியாக அன்றி பலருக்கு நன்மை அளிக்கும் காரியங்களைச் செயற்படுத்துவதே ஏற்றுக் கொள்ளக் கூடியதாகும். ஆத்மிக ரீதியின் நம்பிக்கையுள்ள எவரும் இதனையே செய்ய விரும்புவார்கள். உத்தியோக பூர்வமாக நாம் செயற்படுகின்ற பொழுது கூட பலருக்கு நன்மையளிக்கும் காரியங்களை தர்ம நெறியின்படி சிந்தித்து ஆராய்ந்து முன்னுரிமை கொடுத்துச் செயற்படுத்த வேண்டும். எமக்கு மேலே உள்ளவர்களுக்கு நாம் பதில் சொல்ல வேண்டும் என்பதைச் சாட்டாகக் கூறாது எமக்குள்ள தற்றுணிவுடனும் ஆத்மிக பலத்துடனும் அவற்றை நாம் செயற்படுத்த வேண்டும்.

திருவாசக விழாவில் மூன்றாம் நாள் வடக்குக்கிழக்கு
மாகாண கல்விப்பணிப்பாளர்
செல்வி. தி. பெரியதம்பி

சரியானதைக் கண்டும் செய்ய முடியாமை கோழைத்தனம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான்

1982 - ஆம் ஆண்டு சந்நிதி உற்சவம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தீர்த்தத் திருவிழாவிற்கு இன்னும் ஆறுநாட்கள் இருக்கின்றன. சந்நிதி உற்சவம் தொடங்கி விட்டால் சந்நிதியுடன் தொடர்புடைய அன்பர்கள் சந்நிதி உற்சவத்திற்குச் செல்வது பற்றியும் அங்கே நிறைவேற்ற வேண்டிய நேர்த்திக்கடன்கள் பற்றியும் சிந்திப்பதும் மற்றவர்களுடன் பரஸ்பரம் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதும் வழமையான விடயங்களாகும்.

இது போன்ற ஒரு உரையாடல் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபராக அப்பொழுது கடமையாற்றிய திரு. வேலும் மயிலும் ஐயாவுக்கும் (தற்பொழுது திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலர்) பருத்தித்துறை அறக்கிம் நாவர் கோவில வடக்குக் கிராமத்தைச் சேர்ந்த சமமாட்டுமயர்களான திரு. மா. சாம்பசிவம் திரு. சின்னத்தம்பி ஆகியோருக்குமிடையில் இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது. திரு. வேலும்மயிலும் அவர்கள் பழகுவதற்கு மிகவும் இனிமை



சொல்லின் மேன்மை செயலில் தொனிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பானவர் மக்கள் சேவையே மகேசன்சேவை என்னும் கருத்தை வாழ்க்கையிற் கடைப்பிடித்து வருகின்ற ஒரு உன்னதமான சேவையாளர். உயர்ந்த பதவி வகித்தாலும் பாமரமக்களுடன் அந்நியோன்னியமாகப் பழகுகின்ற பண்புள்ளவர். அவர் சந்நிதியானுடைய உற்சவம் தொடர்பாக மட்டுமன்றித் தமது பகுதிக்குள் அடங்கும் இன்னொரு ஆலயமான நாகர்கோவிலின் எதிர்கொள்ளப் போகும் உற்சவம் தொடர்பாகவும் அவர்களுடன் சில கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டிருந்தார். அப்பொழுது அந்த உரையாடலில் சம்மாட்டியார்கள் இருவரும் தாங்கள் வருடாவருடம் சந்நிதியானிடம் செல்வது பற்றியும் உற்சவத்தின் இறுதிநாளான தீர்த்தத் திருவிழாவிற்கு இருவரும் சென்று அன்னதானம் வழங்கி வருகின்ற பணியை நீண்டகாலமாகச் செயற்படுத்தி வருவது பற்றியும் திரு. வேலும்மயிலும் ஐயா அவர்களுக்கு எடுத்துக் கூறிக் கொண்டிருந்தனர்.

மேற்படி உரையாடலின் நடுவே திரு. மா. சாம்பசிவம் சம்மாட்டியார் அவர்கள் தனது தொழில் தொடர்பான வேலைப்பளுக்கள் காரணமாகத் தான் வருடா வருடம் செல்வது போல இந்த வருடம் சந்நிதியானிடம் வந்து அன்னதானப்பணியை நிறைவேற்ற முடியாத நிலைமையை தனது உறவினரும் சக சம்மாட்டியாருமான திரு. சின்னத்தம்பி சம்மாட்டியார் அவர்களுக்கு எடுத்துக்கூறி அந்தக் கடமையைத் தனக்காகத் திரு. சின்னத்தம்பி சம்மாட்டியார் அவர்களையே நிறைவேற்றுமாறும் கேட்டுக்கொண்டார்.

இந்த உரையாடலைத் தொடர்ந்து அன்று இரவு சந்நிதி முருகன் திருமதி சாம்பசிவம் அவர்களுக்குக் கனவிலே காட்சி கொடுக்கின்றார். இவ்வாறு தனக்குக் கனவிலே சந்நிதி முருகன் காட்சி தந்ததைத் தனது கணவனுக்குத் திருமதி சாம்பசிவம் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். திரு. சாம்பசிவம் அவர்கள் தனது மனைவியுடன் உரிமையுடனும் சிறந்த சிந்தனையுடனும், அதேநேரம் நகைச்சுவையுடனும் பேசுகின்ற இயல்புள்ளவர். தனக்குக் கனவிலே சந்நிதியான் காட்சி கொடுத்தார் என்று தனது மனைவி கூறியதைக்கேட்ட திரு. சாம்பசிவம் அவர்கள் அதனை ஒரு பெரிய விடயமாகக் கருதாது

" முருகன் கனவிலே வந்தவரோ அப்ப நீபோய் முருகனையே கல்யாணம் செய் "

என்று நகைச்சுவையுடன் பதில் கூறிவிட்டுத் தனது வேலையில் மூழ்கிப்போய்விட்டார்.

திருமதி சாம்பசிவம் அவர்கள் மிகவும் அடக்கமான சுபாவமுள்ளவர். அதுமட்டுமல்ல, தனது கணவனது வார்த்தைக்கு எதிர் வார்த்தை பேசாத இயல்புள்ளவராகையால் தனது கணவன் இவ்வாறு சொல்வதற்கு எதுவித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிலும் கூறாது பதிலுக்குத் தானும் சிரித்து விட்டுத் தனது அன்றாட வேலையில் ஈடுபடத் தொடங்கினார். ஆனாலும் சந்நிதியான் கனவிலே காட்சி தந்ததை நினைத்த பொழுது உள்ளத்தில் ஆனந்த பரவசம் ஏற்பட்டுக் கொண்டிருந்தது. அதேவேளை ஆழமான பக்தியுணர்வு கொண்டவரான கணவர் தான் கண்ட காட்சியை ஒரு பொருட்டாக மதியாதிருந்தது அவருக்கு வருத்தமாகவேயிருந்தது.

திரு. மா. சாம்பசிவம் அவர்களும் அவரது மனைவியும் சந்நிதி ஆலயத்தின் வெளிவாசலின் அருகே திருப்பணி உண்டியல் அமைந்திருக்கும் இடத்திற்கு அருகில் அதன் தெற்குப்பக்கமாக அமர்ந்திருந்திருக்கின்றனர் அப்பொழுது சந்நிதியான் மூலஸ்தானத்திலிருந்து வெளிப்பட்டுப் பாலமுருகனாகத் திரு. சாம்பசிவம் தம்பதிகளை நோக்கி நடந்து வருகின்றார் அருள் தரும் புன் சிரித்த முகத்துடன் ஒருகையில் வேலுடன் பாலமுருகனாக வந்து கொண்டிருந்த சந்நிதிமுருகன் சந்நிதியில் அமைந்துள்ள தம்பியுடன் கால்தடக்கிச் சிறிது நிலைதடுமாறி பின்பு தன்னைச் சுதாகரித்துக் கொண்டு வெளியே வந்துகொண்டிருந்தார். பாலமுருகனாக வந்த சந்நிதிமுருகன் திரு. சாம்பசிவம் அவர்களின் அருகில் வந்து அவரது மடியின் பக்கமாக அமர்ந்து கொண்டார். "பின்பு கையில் இருந்த வேலினால் திரு. சாம்பசிவத்தின் நாடியை மெதுவாகத்தட்டி அவரை நோக்கி என்னை நீ நம்பவில்லையா? என்னை நம்பு உனக்கு எல்லா விடயமும் நல்லபடியே நடக்கும் என்று மழலை மொழிகளால் கூறிவிட்டு மீண்டும் மூலஸ்தானத்தை நோக்கி உள்ளே நடந்து சென்றார்."

அளவில்லாத ஆனந்தத்திலும் எல்லையில்லாத உணர்ச்சியினாலும் உந்தப்பட்ட திரு. சாம்பசிவம் அவர்கள் துடிதுடித்து எழும்புகின்றார். ஆ! அப்பொழுதுதான் தெரிகிறது தான் கண்டது கனவென்று.

விடிந்தபின் தன் மனைவியிடம் திரு. சாம்பசிவம் கனவிலே தான் கண்ட காட்சியைக் கூறியது மட்டுமன்றி முதல் நாள் தன் மனைவி கண்ட கனவினைப் பொருட்படுத்தாது தான் அலட்சியமாக நடந்து கொண்டதற்காக வருந்தியும் தெரிவித்துக்கொண்டார்.

அதுமட்டுமன்றித் திரு. சாம்பசிவம் அவர்கள் தனது மனைய வேலைகள் எல்லாவற்றையும் ஒரு புறத்தில் ஒதுக்கி வைத்துவிட்டு முதல் முக்கிய கடமையாக வழமை போலச் சந்நிதியானுடைய தீர்த்த உற்சவத்திற்குச் சென்று அன்னதானம் வழங்குகின்ற செயற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டை நிறைவேற்றி முடிக்கின்ற ஆபத்துக்களை கடமையாகச் செய்ய முற்பட்டார்.

அடியார்கள் ஒருமுறை நினைத் தால் சந்நிதியான் ஓராயிரம் முறை அவர்களை நினைத்து அவர்கள் மீது அருள் செலுத்து கின்ற அற்புதத் தெய்வமல்லவா அதுமட்டுமன்றித் தன்மீது பக்தி கொண்டு சந்நிதியில் வந்து நிறை வேற்றுகின்ற கைங்கரியங்களை வேறு தேவைகளுக்காக அல்லது வேறு காரணங்களுக்காக அந்த அடியார்கள் அவற்றை அசட்டை செய்தாலோ, அல்லது பின்போட் டாலோ உரிமையுள்ள உறவினர் ஒருவர் அல்லது நண்பர் ஒருவர் கட்டிக்காட்டி அல்லது தட்டிக் கேட்டு மற்றவரைத் திருத்துவது போலச் சந்நிதியானும் தனது பக்தர்களுக்கு ஒரு படிப்பினையை ஏற்படுத்தி என்றும் அவர்களைத் தனது பக்தர்களாக வைத்திருக் கும் இயல்புள்ள அற்புதத்தெய்வம் என்பதை அனுபவிப்பவர்கள் அன்றோ அறிவார்கள்.

ஓம் முருகா!

ந. அரியரத்தினம்

## தீமைக்கு சாட்சி

தேவர்கள் செய்த செயற்பாட்டை நாம் வாழ்க்கையில் பாடமாகக் கற் றுக் கொள்ளத்தவறக்கூடாது. தக்கனால் மேற்கொள்ளப்பட்ட யாகத்தில் ஒருசில முனிவர்களைத் தவிர ஏனைய எல்லா முனிவர்களும் - விஷ்ணு, பிரமா போன்ற அனைத்துத் தேவர்களும் கலந்து கொண்டனர். அங்கே தக்கன் சிவனுக்குரிய அவிர்ப்பாகத்தைக் கொடுக்காதது மட்டுமன்றி பரம் பொருளாகிய சிவனை ஏனைய வார்த்தைகளாலும் தூசித்தான்.

அப்பொழுது தேவர்கள் எது சரி எது பிழை என்பதையெல்லாம் தங்களது அறிவாற்றல்களால் முழுமையாகத் தெரிந்திருந்த நிலையிலும் அந்தத் தீமைகளைத் தடுக்காது விட்டுள்ளனர். ஆகவே எல்லாம் தெரிந்த தேவர்கள் எது சரி எது பிழை என்பது தெரிந்திருந்தும் தக்கன் செய்த தவறுகளுக்கு அவர்களும் உடன் பட்டார்கள். அல்லது சாட்சிகளாக அமைந்தனர் என்றே கூறவேண்டும். அதனால்தான் அதற்குரிய தண்ட னையைத் தேவர்கள் அனுபவித்தனர். ஆகவே நாமும் நமது வாழ்க்கை யில் தீமைதை செய்யாமல் இருப்பது மட்டுமன்றி தீயவற்றிற்கு துணை போகாது இருப்பதும் முக்கியமானதாகிறது.

கந்தசஷ்டிக்கால சிறப்பு நிகழ்வில்
பேராசிரியர் கலாநிதி சுப்பிரமணியன்

உற்ற சமயத்தில் உதவுவதே உண்மையான உறவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “இளமையாய் வாழ, இன்பமாய் வாழ”

வடக்கிருக்கப் புகுந்த கோப்பெருஞ் சோழனிடம் சென்ற பிசிராந்தையார் என்னும் புலவரைக் கண்ட சான்றோன் ஒருவர் 'நுமக்கு வயது பலவாகியும் நரை, திரை தோன்றாமைக்குக் காரணம் யாதோ' என வினவினாராக, அப்புலவர் பெருமான்,

“என் மனைவி இல்லறத்திற்குரிய நற்குண, நற் செய்கை உடையவள்; என் மக்கள் கல்வி, கேள்விகளால் நிரம்பப் பெற்றவர்கள். நான் கருதுவனவற்றையே எனது ஏவலர்களும் கருதுபவராகின்றனர். எமது அரசனும் நீதியான பரிபாலனம் செய்கின்றவன். எனது ஊரவர்கள் கல்வியில் மிக்க பாண்டித்தியம் உடையவர்களாய்ப் புலனடக்கம் உடையவர்களாய் வாழ்பவராகின்றனர் ஆதலினால் நான் முதுமையின்றி வாழ்கின்றேன்” என்று பதிலிறுத்திருக்கின்றார். புலவரின் கூற்றிலிருந்து ஒருவனின் இளமையைத் தீர்மானிக்கும் காரணிகள் எவையெனக் கண்டோம்.

இளமையைத் தீர்மானிக்கும் பிறிதொன்று சிந்தனையாகும். ஆக்க சிந்தனையாகிய பக்தி இளமையைக் காக்கின்றது; அழிக்கும் சிந்தனையான பயம் இளமையைப் போக்கிவிடுகின்றது. மற்றொன்று-கபகரவாதம்; அதாவது யாவும் நன்மைக்கே என்று கொள்வது; இது இளமையைக் காப்பது. இதன் மறுதலையானது – அபகரவாதம் – எல்லாம் தீமைக்கே என்று எண்ணுவது. இது இளமையைப் போக்கி விடுவது. இது பற்றியன்றோ செல்லப்பா சுவாமிகள், “ஒரு பொல்லாப்பும் இல்லை. யாவும் நன்மைக்கே” என்று அருளியிருக்கின்றனர்.

மற்றொன்று மனம். வயதில் மிக இளையோரும் முதுமையுடையார் போலாகின்றமைக்குக் காரணம் அவர்களது சிந்தனை. மறுதலையாக, வயதில் மிக மூத்தோரும் இளமையுடையார் போலாவதற்குக் காரணம் அவர்களது சிந்தனை. மனத்தைக் கட்டியாள்பவர் இளமை குன்றாதோராவர். மனத்தை அலைய விடுபவர் முதுமையை வருந்தி அழைப்பவராவர். இது பற்றியன்றோ பட்டினத்தடிகளாரும், ஆயானவை தாயுமானவரும் மனத்தைத் தூர்த்த சிந்தையுள்ள பெண்ணாகவும் உருவகித்திருக்கின்றார். மனத்தைக் கட்டியாள்பவன் இன்பம் அடைகின்றான்; மனத்தைப் புறமலைய விடுபவன் துன்பம் அடையப் பெறுகின்றான். என்னென்ன சித்துக்கள் உடையாரும் சிந்தையை அடக்கப் பெறுவது அரிது எனத் தாயுமான சுவாமிகளும் அருளியுள்ளார்கள்.

கடமையில் இருந்து ஓய்வு எடுத்தல் ஆகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சிந்தனையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறமரிது" என்பது சுவாமிகளின் வாக்கு.

எமக்கு இறைவனால் வழங்கப் பெற்ற சக்தியானது புலன்களின் செயற்பாடுகளினாற் செலவாகிக் கொண்டு போகின்றது. வெங் கோபமும் கடுங்காமமும் நரம்புகளை முறுக்கேற்றிச் சிறுபொழுதில் அவற்றைத் தளர்வு படுத்துவதால், அவர்கள் தம் சக்தியை விரயமாக்கி விடுகின்றனர் என வேதாந்தம் கூறுகின்றது. நிகழ்ந்ததையிட்டுத் துயரத்தை வருவித்துக் கொள்வதும் நிகழ்வதையிட்டு மூளையை அலட்டிக் கொள்வதும் நிகழப்போவதையிட்டுக் கற்பனை பண்ணிக் கொண்டு துன்புறுவதும் எல்லாம் மனத்தைத் தளர்வு படுத்துவனவேயாம்.

மனத்துக்கும் கண்ணுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. மனம் சதா அலையப் பெறுபவர் கண்களைச் சதா இமைப்பவராவர். மனம் அலைபவரின் இன்பங்கள் எய்தப் பெறமாட்டார். தேவர்கள் இமையா நாட்டத்தவராதலினாற் சதா இன்ப நுகர்ச்சி உடையவராகின்றனர். சிவன் முத்தர்களும் இமையா அகக்கட்பார்வையுடைமையாதலினால், பேரின்பம் நுகர்பவராகின்றனர். தேவ ஆண்பாலார் பதினாறு வயதை மிகாதவராயும் தேவ பெண்பாலார் பதின்மூன்று வயதை மிகாதவராயும் இருப்பதன் காரணம் அவரது இன்ப நிலையேயாம். மேலும் அவர்கள் மரணத்தையும் வென்றவராவர். இதே நோக்கில் முனிவர்களும் மரணத்தை வென்றவராய் இலட்சோப இலட்ச ஆண்டுகள் வாழ்பவராகின்றனர். அவர்கள் நிறைமொழி மாந்தர். அவர்களின் வாழ்த்தைப் பெறுவோர் வாழ்வர்; வைதலைப் பெறுவோர் அழிந்தே தீருவர். முனிபுங்கவரின் பார்வை தெய்வீக சக்தி பொருந்தியது. சிவ முனிவர் அழகிய பிணை மானொன்றை இச்சித்து நோக்கினாராக, அம்மானின் வயிற்றிற் சுந்தரவல்லி ஸ்ரீவள்ளியாக உற்பவித்திருக்கின்றார்.

மிகையுணவும் எம்மை நிலைப் படுத்துகின்றது. அமிர்தின் சுவையை மாத்திரம் நுகர்பவராகிய தேவர் இன்பமே என்றென்றும் நுகர்பவராகின்றனர். உணவை மிதமாக உண்பவராகிய நாம் பூவுலகில் உழன்று திரிகின்றோம். பேருணவு கொள்பவராகிய அசுரரும் அரக்கரும் அழிந்தே போயினர். தூய உணவு தேவ நிலைக்கு ஆக்கும்; தீய உணவு நரக நிலைக்கு ஆக்கும். நினைவுகளும் அவ்விதமே. தூய நினைவுடையவர்கள் தேஜஸ் உடையவராகின்றனர். இவ்வகையிலேதான் தேவர்கள் பொலிவுமேனி உடையராவது. தீய நினைவுடையவர்கள் விகாரமான தோற்றம் உடையவர்கள். கம்பரும் அரக்கியர் தோற்றம் பற்றிக் குறிப்பிடுகையில்,

'அரி, நரி, நாயென அலறி முகத்தினர்' எனக் காட்டிச் சென்றுள்ளார்.

என்றிங்ஙனமாக வாழ்வதற்கும் காரணமானது மனமே. ஜெபம், தவம், தியானம் ஆகிய யாவும் மனத்தைச் செம்மைப்படுத்துவதற்கேயாமெனக் கண்டு விதிமுறை கடைப்பிடித்து வாழின் இளமை நலமும் இன்பமும் உண்டாம்.

ஞானபண்டித இயலரசு
க. முத்துவேலு

துன்பத்தை நீக்கிவிட்டு இன்பத்தை அடைய முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருக மந்திரம்

• செஞ்சொல் புனைமாலை •

முருகப் பெருமான் தமிழர் தெய்வம். கந்தரநுபூதி முருகனைப் போற்றி நாள்தோறும் வணங்குவதற்குரிய மந்திர மாலை ஆகும். "சரணம் சரணம் சண்முகா சரணம்" என்று வழிபடும் முருகன் அடியார்களுக்கு ஞானபண்டிதனே குருவாக வந்து வழிகாட்டுவான். கந்தரநுபூதி ஐம்பத்தொரு பாடல்களையும் ஆதாரமாகக் கொண்டு "முருக மந்திரம்" என்ற தலைப்பில் ஞானச்சுடரில் இக்கட்டுரை தொடர்ந்து வெளிவர இருக்கிறது. முருக உபாசகர்கள் அனைவரும் இதனைத் தொடர்ந்து படித்து பயன் அடைவார்களாக.

—சிவ. மகாலிங்கம்

தமிழ் மக்களுடைய வழிபாட்டில் முருகவழிபாடு பண்டு தொட்டு முக்கிய இடம் பெற்று வருகிறது. தமிழ் மக்கள் தாம் வாழும் இடமெல்லாம் முருகப் பெருமானுக்குக் கோயில் அமைத்து வழிபடுகிறார்கள். தமிழ் நாட்டின் ஆதித்த நல்லூரில் கண்டு பிடிக்கப்பட்ட பழைய காலத்து சேவல் மயில் ஆகிய சின்னங்கள் தமிழ்நாட்டில் முருகவழிபாட்டின் தொன்மைக்குச் சான்றாக இருக்கின்றன. உயர்ந்து காணப்படும் மலைக்கு உயர்ந்து விளங்கும் முருகனையே உரிய தெய்வமாகத் தொல்காப்பியம் காட்டுகிறது. "சேயோன் மேய மைவரை உலகம்" என்ற வரிகள் இதனை நிரூபிக்கின்றன. சிலப்பதிகாரம் முருகனுக்குத் தமிழ் நாட்டில் கோயில் இருந்ததை "அறுமுகச் செவ்வேள் அணி திகழ்கோயில்" எனக் குறிப்பிடுகிறது. புறநானூற்றில் முருகனைத் "திருந்தகு சேய்" எனப் புலவர்கள் போற்றினார்கள். கலித்தொகை, அகநானூறு, புறநானூறு, ஐங்குறுநூறு, குறுந்தொகை, பதிற்றுப் பத்து, பத்துப்பாட்டு ஆகிய நூல்களில் எல்லாம் முருகனின் பெருமை பேசப்பட்டுள்ளது.

தமிழ் நாட்டில் திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழநி, திருத்தணிகை, சுவாமிமலை, பழமுதிர்சோலை ஆகிய ஆறுபடை வீடுகளில் இருக்கும் முருகன் அருள்

நாமம் ஒருவனைப் பிரசைக்காரனாக்கி விடும்.

ஆட்சி புரிகிறார். ஈழத்தின் தென் பகுதியில் இருக்கும் கதிர்காமம் எல்லா இன மக்களாலும் வழி படப்படும் முருகன் தலம் ஆகும். யாழ்ப்பாணக் குடாநாடும் முருகனின் அருளாட்சிக்கு உட் பட்ட பிரதேசமே ஆகும். அலங் காரக் கந்தனாக நல்லூர் முருகன் ஆலயமும், அபிஷேகக் கந்தனாக மாவிட்டபுரம் முருகன் ஆலயமும் அன்னதானக் கந்தனாக செல்வச் சந்நிதி முருகன் ஆலயமும் காணப் படுகின்றன. ஆற்றங்கரையில் இருந்து அருளாட்சி புரியும் சந்நிதி முருகனை வழிபட்டு தங்களின் உடல் நோய், உள நோய் ஆகிய வற்றை நீக்கி தெய்வீக வாழ்வைப் பெற்று வருகிறார்கள். ஆடியும், பாடியும், அழுதும், தொழுதும் பக்திப் பரவசப்பட்டு அடியார்கள் சந்நிதி வேலவனை வணங்கி வரு கிறார்கள். சந்நிதியான் ஆழ்வில் "சோறு மணக்குது" எனத் தவத் திரு யோகர் சுவாமிகள் கூறுவார். அடியார்களின் உளப் பிணியைப் போக்கும் சந்நிதி முருகன் அவர் களின் பசிப்பிணியையும் போக் குவான். அடியார்களின் பசிப் பிணியைப் போக்கும் பணியில் சந்நிதியான் ஆச்சிரமம் மகத்தான பணியை ஆற்றிவருகிறது.

சந்நிதியான் ஆச்சிரமத்தின் சைவகலை பண்பாட்டுப் பேரவை யினர் ஞானச்சுடர் என்ற சைவ மணம்கமழும் ஆத்மீக சஞ்சிகையை நடாத்தி வருகிறார்கள். இச்சஞ்சி கையில் பன்னிரு திருமுறைகளைப் பற்றித் தொடர் கட்டுரை எழுதும் பாக்கியம் அடியேனுக்கு முருகப் பெருமானின் அருளால் கிடைத் தது. இத்தொடர் கட்டுரைகளை திருமுறைச் செல்வம் என்ற தலைப் பில் நூல்வடிவாக சென்ற வருடம் வெளியிட்டேன். இந்நூலை வெளி யிட்ட சில நாட்களின் பின் நல் லைக் கந்தன் ஆலயத்திற்கு வழி பாட்டிற்காக அடியேன் சென்றி ருந்தேன். உள்வீதியை வலம் வந்து வணங்கிக் கொண்டிருந்த பொழுது இளைப்பாறிய ஆசிரியர் ஒருவர் வந்து எனது கையைப் பிடித்து "திருமுறைச் செல்வம்" புத்த கத்தை தான் பார்த்ததாகவும் நன் றாகவும் இருந்தது எனவும் வாழ்த் தினார். பக்திப் பரவச நிலையில் நின்று வாழ்த்திய அவர் உணர்ச்சி வயப்பட்ட நிலையில் தம்பி முரு கனைப் பற்றி எழுது. முருகனைப் பற்றி எழுது எனக் கூறினார். அவருக்கூடாக ஞானவேலவனே அடியேனுக்கு கட்டளையிட்டதாக ஏற்றுக்கொண்டு புத்தாயிரமாம் ஆண்டில் மலர இருக்கும் ஞானச் சுடர் சஞ்சிகையில் "முருக மந்தி ரம்" என்ற தலைப்பில் கந்தரநு பூதி தொடர் கட்டுரையை எழுத ஆரம்பிக்கிறேன். சந்நிதி முருகன் எனக்குள்ளே நின்று வழிகாட்டு வான் என்ற நம்பிக்கையோடு இக் கட்டுரையை எழுதுகிறேன்.

ஆன்மாவைப் பிடித்திருக்கும் பசுஞானம், பாசஞானம் என்பன நீங்கி பதி ஞானமாகிய சிவஞா னம் கிடைப்பதற்கு வழி காட்டும் திசைகாட்டிகளாக அமைந்திருப் பவை அருளாளர்கள் அருளிய

★ அறிவாளி முதலில் தன்னையே திருத்துகிறான். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானத்திரு நூல்களாகும். 'யான்பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்' என்ற பெருநோக்கோடு அருளாளர்களால் அருளப்பெற்ற பாடல்கள் ஆன்மா சிவஞானத்தைப் பெறுவதற்கு உதவும் மாத்திரைகளாக காணப்படுகின்றன. பக்தியோடு இறைவனைப் பாடிப் பரவி வணங்குவது அவருக்கு நாம் செய்கின்ற அர்ச்சனை என்பதை "அர்ச்சனை பாட்டேயாகும் ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுக என்றார் தூமறை பாடும் வாயார்" எனப் பெரிய புராணம் கூறுகிறது. முருக உபாசகர்கள் பக்தியோடு ஞானப் பனுவலை நாள்தோறும் பாடித் துதிக்க உதவும் அர்ச்சனை மலர்களே கந்தர் அநுபூதி ஆகும்.

முருகப்பெருமானை பல்வேறு காலத்தில் பல்வேறு வகையான தமிழில் அருளாளர்கள் பாடித் துதித்தார்கள். நக்கீரர் பெருமான் சங்கத் தமிழில் முருகனைப் பாடித் துதித்தார். பத்துப்பாட்டில் முதலாவது நூலாக விளங்குகின்ற திருமுருகாற்றுப்படை முருகப் பெருமான் மீது அடியார்களை வழிப்படுத்தும் நூல் ஆகும். திருமுறை வரிசையில் பதினோராம் திருமுறையில் திருமுருகாற்றுப்படையும் சேர்க்கப்பட்டுள்ளது. திருமுருகாற்றுப் படையாகிய தெய்வ நூலை நாள்தோறும் பாராயணம் செய்வதால் இம்மை மறுமைப் பயனை எளிதில் அடையலாம் என்பது முருகன் அடியார்களின் அசையாத நம்பிக்கையாகும். பல்வேறு பருவங்களில் முருகப்பெருமானைப் பாவனை பண்ணி அவர் மீது பகழிக்கூத்தர் பிள்ளைத்தமிழ் பாடினார். பிள்ளைத்தமிழ் இலக்கியங்களில் பகழிக்கூத்தர் திருச்செந்தூர் முருகன் மீது பாடிய பிள்ளைத்தமிழும், குமரகுருபரர் மீனாட்சி அம்மை மீது பாடிய பிள்ளைத்தமிழும் உயர்ந்த நூல்களாகப் போற்றப்படுகின்றன. வடமொழிப் புராணமாகிய ஸ்கந்த புராணத்தின் ஆதசங்கிதையில் வரும் சிவரகசியக் காண்டத்தின் முதல் ஆறு காண்டங்களையும் கச்சியப்ப சிவாசாரியார் 10345 பாடல்களாக பக்திச் சுவையுடன் கந்தபுராணமாகத் தந்துள்ளார். சைவ சித்தாந்த தத்துவத்தை விளக்கும் கருவூலமாக கந்தபுராணம் திகழ்கிறது.

சந்தத் தமிழில் அருணகிரிநாதர் முருகனைப் பாடிப் பரவிப் பணிந்து வணங்கினார். இவர் அருளிச் செய்த நூல்கள் ஆறு ஆகும். திருப்புகழ், திருவகுப்பு, கந்தரந்தாதி, கந்தரலங்காரம், வேல்மயில் விருத்தம், கந்தரநுபூதி என்பன அவை ஆகும். இந்த ஆறு நூல்களில் கந்தரநுபூதி வடிவத்தில் சிறியது மகிமையில் பெரியது ஆகும். இந்நூல் மந்திர மாலையாகவே அமைந்துள்ளது. முருகப் பெருமானின் பாதக் கமலங்களில் செஞ்சொற் புனைமாலையாக கந்தர் அநுபூதி என்னும் மந்திர மாலையை அருணகிரியார் சாத்தினார். சிவன், அகத்தியர், அருணகிரியார் ஆகிய மூவரும் மாத்திரமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகப் பெருமானிடம் நேரடியாக உபதேசத்தைப் பெற்றார்கள். கந்தவேள் பெருமானின் திருவருளுக்கு பாத்திரமாகிய பின்பு அவரே உள்நின்று உணர்த்த அருணகிரியார் பாடிய பாடல்களே கந்தர் அநுபூதி ஆகும். இதனைத் தாயுமான சுவாமிகள்,

"கந்தரநுபூதி பெற்றுக்
கந்தரநுபூதி சொன்ன
எந்தையருள் நாடியிருக்கு
நாள் எந்நாளோ"

எனத் தமது பாடலில் குறிப்பிடுகிறார்.

"வாயே வாழ்த்து கண்டாய்" என்பது அப்பர் பெருமானின் வாக்கும் ஆகும். இறைவனை நினைக்கும் போதும் துதிக்கும் போதும், வழிபடும் போதும் உள்ளம் உருக வேண்டும். பலருடைய உள்ளத்தில் தெய்வ நினைப்பும் இல்லை, தெய்வீக சிந்தனையும் இல்லை. அநேகருடைய உள்ளம் உருகாது கெட்டியான கல்லைப் போல இருக்கிறது. கல்லுங்கூட உருகினாலும் இந்தக் கல்நெஞ்சம் உருகாது என்பதை "கல்லேனும் ஐயவொரு காலத்தில் உருகும், என் கல்நெஞ்சம் உருகவில்லையே" எனத் தாயுமான சுவாமிகள் தனது நெஞ்சிற்கு உபதேசம் செய்கிறார். இறைவனை நினைந்து உருகி நிற்கும் அடியார்களது ஆணவ இருளை இறைவன் போக்கி அருளுகின்றான். ஊனுக்குள் உயிரும், உயிருக்குள் இறைவனும் இருக்கிறார்கள். முதலில் ஊன் உருக வேண்டும், பின்பு உயிர் உருக வேண்டும். உருகிய உயிரில் இறைவன் அத்துவிதமாகக் கலந்து விடுகின்றான். இவ்வாறு உள்ளம் உருகி வழிபடும் அடியவர்களுக்கு இறைவன் எளியவன் ஆகிறான். "உன்னையொழிய ஒருவரையும் நம்புகிலேன், பின்னை ஒருவரை யான் பின் செல்லேன்" என்ற நக்கீரர் வாக்கிற்கு அமைய இறைவனை விட வேறு புகலிடம் இல்லை எனச் சரணாகதியாக இறைவனின் பாதங்களைப் பற்றி அருணகிரியார் கந்தரநுபூதியைப் பாடுகிறார். தஞ்சமென வரும் அடியவர்களுக்கு அருள் புரிகின்ற ஆறுமுகப் பெருமான் மீது நெஞ்சக் கல்லுருகும் பொருட்டு அநுபூதி என்ற செஞ்சொற் புனை மாலையை சூட்டுகின்றேன். இந் நூலை சிறப்புற தான் ஆக்கி முருகப் பெருமானுக்கு 'செஞ்சொற் புனைமாலையாக'' சாத்துவதற்கு விக்கினங்கள் தீர்க்கும் விநாயகப் பெருமானின் திருவருளை வேண்டி, அநுபூதியின் காப்புச் செய்யுளைத் தருகிறார்.

"நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந்துருகத்
தஞ்சத் தருள் சண்முகனுக் கியல்சேர்
செஞ்சொல் புனைமாலை சிறந்திடவே
பஞ்சக்கர வானை பதம் பணிவாம்."

(தொடரும்......

சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம்

ஆடம்பர வாழ்வு அமைதிக்கும் பகையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

சிவமயம்

திருக்கேதீச்சரம்

திருவாசகம் ஸ்ரீ

# சபாரத்தினம் சுவாமிகள்

## 12வது ஆண்டுக் குருபூசையும், நூல்வெளியீடும்

## 12-02-2000

பம்பலப்பிட்டி
சரஸ்வதி மண்டபம் கொழும்பு

தலைமை :

திருப்பணித் தலைமணி திரு. சி. தியாகராசா S. T. R. அவர்கள்

பிரதம விருந்தினர் :

திரு. சி. தில்லை நடராசா அவர்கள்
மேலதிக செயலாளர் கல்வி உயர்கல்வி அமைச்சு.

சிறப்பு விருந்தினர்கள் :

திரு. ந. பரஞ்சோதி அவர்கள்
மேலதிக செயலாளர் (இந்து விவகாரம்) கலாசார சமய அலுவல்கள் அமைச்சு.

திருமதி. சாந்தி நாவுக்கரசன் அவர்கள்
பணிப்பாளர் இந்து சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம்.

திரு. குமார் வடிவேல் அவர்கள்
உதவிப் பணிப்பாளர் (இந்துவிவகாரம்) இந்துசமய பண்பாட்டு
அலுவல்கள் திணைக்களம்.

கம்பவாரிதி திரு. இ. ஜெயராஜ் அவர்கள்.

வாகீச கலாநிதி திரு. க. நாகேஸ்வரன் எம். ஏ. அவர்கள்
மொழித்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் சப்பிரகமுவ
பல்கலைக்கழகம் பெலிகுலோயா.

முதற்பிரதி பெறுநர்:

சுப்பையா ஜெயவதாலன்
அதிபர் சியாமளா ஜுவலர்ஸ் - கொழும்பு

★ துயரம் மனிதனைக் கிழவனாக்கி விடுகிறது. ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிகழ்ச்சிகள்

திருவருளை முன்னிட்டு, குறிப்பிட்ட நேரத்தில் ஆரம்பமாகும் நிகழும் பிரமாதி ஆண்டு தைத்திங்கள் 29-ம் நாள் (12-02-2000) சனிக்கிழமை மாலை 5 மணி தொடக்கம் மல்லப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் திருவாசகப்பேறுற்ற ஸ்ரீ சபாரத்தினம் சுவாமிகள்.

திருவடி வழிபாடு சிறப்பாக நடைபெறவுள்ளது.

மாலை

5-00 தீபாராதனை திருமுறைப்பாராயணம்

5-10 திருவாசகம் பாராயணம் ( அடியார்கள் )

5-45 கூட்டுப்பிரார்த்தனை

6-00 அருளுரை சிவஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வரக்குருக்கள்

6-05 தலைமையுரை

6-10 மானுடவாழ்வின் மகத்துவம் நூல்வெளியீட்டுரை
திரு. இ. ஜெயராஜ் அவர்கள்

6-30 நூல் வழங்குதல்

6-40 பிரதம விருந்தினர் உரை

6-50 சிறப்புரை திரு. ந. பரஞ்சோதி அவர்கள்

7-00 தொகுப்புரையும் நன்றியுரையும்
வாகீச கலாநிதி க. நாகேஸ்வரன் எம். ஏ. அவர்கள்.

7-20 தீபாராதனை - மங்களம் அமுது வழங்கல்

இவ்வைபவத்தில் கலந்து நூல் ஒன்றையும் உவந்து பெற்றுக்கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

யாழ் / மறவன் புலவில் சுவாமியின் சமாதி ஆலயத்திலும் 12-02-2000 அன்று அபிஷேகம் பிரார்த்தனை நடைபெறும்.

சி. தியாகராசா ( S. T. R. )
தலைவர்

த. துரைராசா
செயலாளர்

ஸ்ரீ சபாரத்தினம் சுவாமிகள் தொண்டர் சபை

கடன்படுதல் ஆபத்தை வளர்ப்பதற்கு வழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு குடும்பத்தின் கதை

இக்குடும்பம் பலவகையாலும் குடும்பம். இக்குடும்பத் தலைவன், ஒரு பெரிய குடும்பி. பெரிய குடும்பியாக இருந்தாலும் எல்லோருக்கும் உணவு போடுவது பிச்சை எடுத்துத்தான். பிச்சை எடுப்பதற்கு அவனிடம் நல்ல பாத்திரம் கிடையாது ஓட்டிலேதான் பிச்சையெடுப்பான். எடுத்த பிச்சையை அன்றே தீர்த்துக்கட்டிவிடும் அவனது குடும்பம். சேமிப்புக் கணக்கு தெரியாது. வங்கியிலும் வைப்புக்கிடையாது.

இவனுக்கென்று கட்டாடையுமில்லை உடையுமில்லை மிருகங்களின் தோலையே உடுப்பான். புலித்தோல் என்றால் அவனுக்கு மிகவும் விருப்பம். சரியான விசரன். தான்குளித்தேயில்லை. மலையிலுமிருப்பான், மடுவிலும் இருப்பான், மாயானத்திலுமிருப்பான். ஆட்கள் இல்லாத நேரம் பார்த்துச் சுடலையில் கூத்தாடுவான் கோவணத்துடனும் கூத்தாடுவான். கோவணம் இல்லாமலும் கூத்தாடுவான் (திகம்பரம்) கூத்தாடுவது மட்டுமன்றி பிணத்தைச்சுட்ட சாம்பலை உடல் முழுவதுமே பூசுவான். எலும்புகளையும் பிணங்களின் பற்களையும் மாலையாகக் கோத்து அணிவான். இவனுக்குத்துணையாகச் சுடலையில் பிணத்தின் பேய்களும் கூத்தாடும்.

பெண்களைப் போலநகைகளையும் அணிந்திருப்பான். வலக்காதில் குண்டலமும், இடக்காதில் தோடும். மார்புச்சங்கிலி பாம்பு. பார்த்தால் பயம்வரும். சரியான ஆண்டி. இவனைத்தேடி ஒருபெண் பொருளும் எடுத்து இவனிடம் சென்றாள். அவனை அப்பா என்று அழைத்துக் கொண்டாள்.

தலை சீவியதை அறியான் இக்குடிப்பிறந்த கூந்தல் எண்ணெயொரு தேய்ப்பதில்லை. செம்பட்டையான மயிர். ஒரு கட்டத்தில் இவனின் தலையில் கெங்கை குடிகொண்டது. தலைக்கிளிப்பு ஒன்று அவனது சடையில் மினுங்கிக் கொண்டிருக்கின்றது. அமாவாசையின் மூன்றாம் நாள் அந்தக் கிளிப்பைப் பார்த்தால் பிணிதீரும், பசிதீரும். அவ்வளவு ஒளி.

பிச்சையெடுப்பதில் இவன் சரியான கள்ளன். தோலிருக்கச் சுளை வாங்கிவிடுவான். உடம்பிருக்க உள்ளத்தைக் கவர்ந்துவிடுவான். அவனது இயல்பான காதல் இவனது கள்ளத்தனத்தை மூன்று வயதுப் பையனே கண்டுபிடித்து வெளியிட்டான்.

எல்லோரும் இவன் விட்டுச் செல்வதில்லை. இருபெண்கள் இவனிடம் அகப்பட்டார்கள். ஒருத்திக்குப் பெயர் உமை, மற்றவளுக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர் கங்கை. இரண்டு மனைவிக் குமிடையே சண்டை ஏற்படுவது இயற்கை. இதனால் கங்கையை சடைக்குள் மறைத்து வைத்திருக்கின்றான். பேசிச் செய்த பெண்ணில் அன்புடையவன் என்று காட்ட அவளை பிரியாமல் இருப்பான். அவள் சொற்படியே நடப்பான் இரு என்றால் இருப்பான் எழும்பென்றால் எழும்புவான் பெண்சாதிக்கடக்கம்.

பிறப்புச்சாட்சிப் பத்திரம் இவனுக்கில்லை ஆனால் அடையாள அட்டை மாத்திரம் உண்டு. வெவ்வேறு பெயர்களில் அடையாள அட்டை உண்டு. ஒரு இடத்தில் உருத்திரன், ஒரு இடத்தில் சந்திரசேகரன், இன்னொரு இடத்தில் நீலகண்டன் இப்படி 25 பெயர்களில் அடையாள அட்டை உண்டு. பெயருக்கு முன்னால் தலைப் பெயர் இல்லை. தாய் தந்தை பெயர் இல்லாதவன் எப்படியோ களவெடுத்து தப்பிக் கொள்வான்.

பின்னைப் பொடியன் இவனை கள்வன் என்று சொல்ல வியோதிபர் ஒருவர் ஆளைக் கண்டேன் கண்டேன் எனச் சத்தம் போட்டார்.

“தேடித் தேடொணாத் தேவனை என்னுள்ளே தேடிக் கண்டு கொண்டேன்” என்பது வியோதிபரின் கூக்குரல்.

வீடுவாசல் இல்லாத இந்தப் பிச்சைக்காரன் பெண்ணெடுப்பதற்காக மலைக்குச் சென்றான். பெண்சாதி வீட்டிலே தங்குமிடமாகினான். ஆனால் நிதம் வீட்டில் இருப்பதில்லை. வயிற்றுப் பாட்டிற்கு அலைவது தான் தொழில் இவனைப் பெரியவன் என்று பெரியவர்கள் கூறுகின்றனர்.

தொடரும் ......

கை. நமசிவாயக்குருக்கள்

நீங்களும் நானும் எவ்வளவு காலம் உயிர் வாழ வேண்டும் என்று விதிக்கப்பட்டிருக்கிறோமோ, அது வரையில் கடவுளைப் பிரார்த்தனை செய்தபடியே பிறர் நலனுக்காக உழைத்து வாழ வேண்டியவர்களாக இருக்கிறோம். — காந்தி

நன்மைக்கு நன்மை செய் - தீமைக்கும் நன்மை செய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசக விழா - 1999

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் வருடாந்த திருவாசக விழா 19 - 12 - 1999 ஞாயிற்றுக்கிழமை பக்தி பூர்வமாக இடம் பெற்றது.

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் இடம் பெற்ற விசேஷ அபிஷேகம் பூஜை என்பவற்றைத் தொடர்ந்து ஆலயத்திலிருந்து சமய குரவர்களது திருவுருவப்படங்களும், திருவாசக ஏடுகளும் வீதி வலமாக ஆச்சிரமத்திற்கு எடுத்து வரப்பட்டன. கலாபூஷண விருது பெற்ற திரு. வை. செல்லத்துரை அவர்களது திருவாசக பாராயணத்துடன் விழா ஆரம்பமாகியது.

நல்லைக்குரு முதல்வர் :

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் திருவாசக விழாவுக்குத் தலைமை தாங்கி நடாத்தினார்கள்.

ஆதீனமுதல்வர் அவர்கள் தமது ஆரம்ப உரையில் மார்கழி மாதத்தின் சிறப்பையும், திருவாசகத்தின் சிறப்பையும் அடியார்களுக்கு உணர்வு பூர்வமாக எடுத்து விளக்கினார்கள். மார்கழி மாதத்தில் ஏகாதசி நாளில் மனிதர்கள் சொர்க்கத்திற்குப் போவதற்கான கதவுகள் திறந்திருக்கின்ற வழக்கத்தினையும் எடுத்துக்கூறி அதனால்தான் அன்றைய தினம் பெருமாள் கோவிலின் சொர்க்க வாயிற்கதவு திறந்திருக்கும் மரபும் இன்றும் ஆலயங்களிற் பேணப்பட்டு வருவதையும் எடுத்துக் கூறினார்கள்.

செல்வி இலகுமதி பெரியதம்பி :

முன்னாள் வடக்குக்கிழக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் செல்வி இலகுமதி பெரியதம்பி அவர்கள் திருவாசக விழாவிற்குப் பிரதம விருந்தினராக வருகை தந்தது விழாவினைப் பல்வேறு வகையில் மெருகூட்டுவதாக அமைந்திருந்தது.

எமது சமயத்தையும், பண்பாட்டையும் பேணிப்பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை அவர் தமது உரையில் சுட்டிக் காட்டினார்கள். தென்கொரியா, யப்பான் போன்ற நாடுகளிலும் பெண்கள் உடம்பு

---

✯ சமுதாயத்தை உருவாக்கும் சிற்பிகள் தாய்க்குலம்தான். ✯

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுவதும் உடையணிகின்ற முறையை இன்றும் நடைமுறைப்படுத்துகின்றனர். அதே போன்று நாமும் எமது பாரம்பரியப் பண்பாடுகளைத் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துக்காட்டினார்கள். ஆலயங்களுக்குச் செல்லுகின்ற சந்தர்ப்பங்களிலேனும் அவற்றை நாம் கடைப்பிடிக்க வேண்டுமென்பதை வலியுறுத்திக் கூறினார்கள்.

பிள்ளைகள் கல்வி கற்கும் காலங்களில் நல்லவற்றில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பங்களை வழங்குதல், பல்வேறு போட்டிகளிற் பங்குபற்றுவதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல் என்பவற்றுடன் நின்று விடாது தொண்டுகளில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பங்களையும் ஏற்படுத்திக்கொடுப்பது அவசியமென்பதை மாணவர்களும், ஆசிரியர்களும் சமூகமளித்திருந்த அந்த விழாவில் எடுத்துக்கூறினார்கள். இவ்வாறு செயற்படும் பொழுது இந்தப் பிள்ளைகள் சமூக இசைவாக்கம் உள்ளவர்களாகவும், தொண்டுசெய்யும் இயல்புள்ளவர்களாகவும் எதிர்காலத்தில் உருவாகின்ற வாய்ப்பு ஏற்படுமென்பதையும் தெளிவாக எடுத்துக்காட்டினார்கள். இவ்வாறான செயற்பாடுகளைச் செயற்படுத்துவதற்குப் பாடசாலைக்கு வெளியேயுள்ள சமய நிறுவனங்களும், ஸ்தாபனங்களும் தங்களது பங்களிப்பை வழங்குவது பயனுடையதாகும் என்பதையும் சுட்டிக் காட்டினார்கள். சந்நிதியான் ஆச்சிரமம் இவ்வாறான செயற்பாடுகளைப் பாடசாலை மாணவர்களுக்காகச் செவ்வனே நிறைவேற்றி வருவது பாராட்டப்படவேண்டிய விடயமென்பதைச் செல்வி திலகவதி பெரியதம்பி அவர்கள் குறிப்பிட்டார்கள்.

போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களது பண்ணிசை ஓதும் நிகழ்வும் சிறப்பாக இடம்பெற்றது. ஓய்வுபெற்ற உதவி அரச அதிபர் திரு. சி. முருகேசம்பிள்ளை அவர்கள் சிறப்பு விருந்தினராகக்கலந்து கொண்டார்கள். வடமராட்சி வலய சங்கீத பாடத்திற்கான முதன்மை ஆசிரியை செல்வி தம்பு சரோஜா முதலிய முக்கிய பிரமுகர்களும் விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்களைப் பிரதம விருந்தினர் அவர்கள் வழங்கிக் கௌரவித்தார்கள். வழமைபோலச் சான்றிதழ், பணம், பரிசுகள் ஆகிய மூன்றும் வெற்றியீட்டியவர்களுக்கு வழங்கப்பட்டன. செயலாளரின் நன்றியுரையைத் தொடர்ந்து மாகேசுவர பூஜை இடம்பெற்றது.

---

★ வாய்ப்பேச்சால் உலை அரிசி வேகுமா? ★

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாசி மாத வாராந்த நிகழ்வுகள்

04 - 02 - 2000 வெள்ளிக்கிழமை முற்பகல் 9 - 00 மணியளவில்

யாழ் இந்து சமயப்பேரவை கௌரவ செயலாளர்

சைவத்திரு. சி. சக்திகிரிவன் யாத்த

" முருகன் புகழ் " வெளியீட்டு விழா

---

11 - 02 - 2000 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

அறிமுகவுரை : சி. செ. சோமசுந்தரம்
( இளைப்பாறிய, வங்கி முகாமையாளர் )

**சொற்பொழிவு : " அலங்காரம் "**

வழங்குபவர் : சித்தாந்த பண்டிதர் சி. வேலாயுதம்
( ஓய்வு பெற்ற அதிபர் )

---

18 - 02 - 2000 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

அறிமுகவுரை : சி. நவரத்தினம்
( இளைப்பாறிய ஆசிரியர் )

**விடயம் : " பக்திப் பாடல் "**

வழங்குபவர் : வில்லிசைப் புகழ் க. சத்தியதாஸ்
( பக்கவாத்திய சகிதம் )

---

25 - 02 - 2000 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

# ஞானச்சுடர் மாத வெளியீடு
# மாசி - 2000

வெளியீட்டுரை:- சித்தாந்த பண்டிதர் வ. ஆ. தங்கமயில்
( நில அளவையாளர் )

மதிப்புரை : திரு. ஆ. சிவநாதன்
( ஆசிரியர் ஹாட்லிக் கல்லூரி )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசகர் போட்டி

முதல் பத்து மலரிலும் ( 2000 ஜனவரி - ஒக்டோபர் ) வெளியிடப்படும் விடயங்களை உள்ளடக்கியதாக வாசகர் இடையே போட்டி ஒன்று நடைபெறவுள்ளது. இப்போட்டியில் வெற்றி பெறுவோருக்கு வழமைபோல பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.

போட்டி தொடர்பான விபரங்கள் நவம்பர் மாத இதழில் வெளியிடப்பட்டு போட்டி நடாத்தப்பட்டபின் அது பற்றிய முடிவுகள் 2001 ஜனவரி மலரில் வெளியிடப்படும்.

---

## அன்பான வேண்டுகோள்

மலருக்குப் பொருத்தமான, தரமான சொந்த ஆக்கங்களை இலகு தமிழில் எழுதி எமக்கு அனுப்பி வைக்குமாறு சமயப் பெரியார்களையும், அறிஞர் பெருமக்களையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

மலர்க் குழு :

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை,

செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org